தொகுதி நிறுவனக் கணக்குகள்

Group Accounts

க. க. அருள்வேல்
சிரேஷ்ட விரிவுரையாளர்
வணிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

பிரியன் வெளியீட்டு நிறுவனம்
யாழ்ப்பாணம்
2003

தொகுதி நிறுவனக் கணக்குகள்
Group Accounts

க. க. அருள்வேல்

சிரேஷ்ட விரிவுரையாளர்,

வணிகத்துறை,

யாழ். பல்கலைக்கழகம்.

பிரியன் வெளியீட்டு நிறுவனம்

யாழ்ப்பாணம்

2003

நூல்	:	தொகுதி நிறுவனக் கணக்குகள்
முதற் பதிப்பு	:	டிசம்பர் 1998
மறு பதிப்பு	:	ஜனவரி 2003
பதிப்புரிமை	:	ஆசிரியருக்கே
நூலாசிரியர்	:	க.க.அருள்வேல் யாழ். பல்கலைக்கழகம்
வெளியீடு	:	பிரியன் வெளியீட்டு நிறுவனம், யாழ்ப்பாணம்.
பக்கங்கள்	:	102
விலை	:	100/=
தாளின் தரம்	:	70 கிராம் பாங்
அச்சுப்பதிப்பு	:	கங்கை ஓவ்செற் பிறிண்டேர்ஸ் யாழ்ப்பாணம்.

அணிந்துரை

அண்மைக் காலத்தில் பலராலும் விரும்பிக் கற்கப்படும் ஒரு பாடமாக கணக்கியல் மாறிவிட்டது மட்டுமல்லாமல் நல்ல உயர் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத்தரும் துறையாகவும் விளங்குகின்றது. இதன் காரணமாக வேலை வாய்ப்பினைப் பெற விரும்பும் எல்லோரும் கணக்கியலைக் கற்பதில் நாட்டம் காட்டுகின்றனர். இத்தகையோரது அறிவுப் பசியைப் போக்கிவிட தமிழில் போதுமாக நூல்கள் இல்லையென்ற காரணத்தால் அதனை நிவர்த்திக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையே திரு க.க.அருள்வேல் அவர்களின் இரண்டாவது வெளியீடான "தொகுதி நிறுவனக் கணக்குகள்" எனும் நூலாகும்.

திரு அருள்வேல் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வணிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். உயர் கணக்கியல் தொடர்பான நல்ல கற்றல், கற்பித்தல் அறிவைக் கொண்டவராவார். தனது அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தி இலகுவாகவும் தெளிவாகவும் விளங்கக் கூடிய வகையில் "தொகுதி நிறுவனக் கணக்குகள்" என்கின்ற இந்நூலை எழுதியுள்ளார்.

தொகுதி நிறுவனங்கள் சம்பந்தமான கணக்குகளை விளங்கிக் கொள்வதில் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்தகைய கடினமான கணக்கினை இலகுவாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் தனது கற்பித்தல் நுட்பத்தைப் பொருத்தமான உதாரணங்களுடன் இணைத்து இந்நூலை வரைந்துள்ளார். அவரது இந் நன்முயற்சி மாணவர்களிடம் நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இத்தகைய நூலை எழுதிய ஆசிரியரைப் பல்லாண்டு காலம் வாழ வாழத்துவதுடன் அவருக்கான இறையாசியையும் வேண்டி நிற்கின்றேன்.

க. தேவராஜா
தலைவர்,
வணிகத்துறை,
யாழ் பல்லைக்கழகம்.
20-12-1998

முன்னுரை

இன்றைய உலகப் பொருளாதாரச் செயற்பாட்டில் கணக்கியலானது இன்றியமையாததும் மிக வேகமாக வளர்ந்துவரும் ஒரு துறையாகவும் காணப்படுகின்றது. இதன் காரணமாக உயர் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் கணக்கியல் கற்கை நெறியின் தேவை முக்கியமான ஒன்றாகிவிட்டது. இதனால் கணக்கியலை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவரது எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

வணிகம் (உள்வாரி, வெளிவாரி), முகாமைத்துவம், வங்கியியல் சார்ந்த கற்கைநெறிகளிலும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் உயர் தேசிய டிப்ளோமா, உயர் கணக்கியல் டிப்ளோமா ஆகிய நெறிகளிலும் உயர் கணக்கியலில் தொகுதி நிறுவனக் கணக்குகள் (Group Accounts) மிக முக்கியமான பிரிவாகக் காணப்படுகின்றது.

இத் தொகுதி நிறுவனக் கணக்குகளுக்கு இதுவரை தமிழில் எந்தவொரு புத்தகமும் வெளிவரவில்லை. எனவே, கணக்கியல் மாணவர்களுக்கு இந்நூல் பயனளிப்பதாக அமையும் என நம்புகின்றேன்.

க.க.அருள்வேல்
21-12-1998

பொருளடக்கம்

அணிந்துரை

முன்னுரை

பொருளடக்கம்

அத்தியாயம் ஒன்று : 1
தொகுதி நிறுவனக் கணக்குகளுக்கு
ஓர் அறிமுகம்

அத்தியாயம் இரண்டு : 7
திரட்டிய ஐந்தொகை அடிப்படைத்
தத்துவங்கள்

அத்தியாயம் மூன்று : 48
பல கம்பனி அமைப்பு

அத்தியாயம் நான்கு : 76
திரட்டிய இலாப நட்டக் கணக்கு.

பயிற்சிகள் 91

அத்தியாயம் ஒன்று

தொகுதி நிறுவனக் கணக்குகளுக்கு ஓர் அறிமுகம்
An Introduction to Group Accounts

1.1 கட்டுப்பாடு (Control)

ஒரு நிறுவனத்தின் நிதி, செயற்பாட்டு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தக்கூடிய சக்தியே கட்டுப்பாடு (Control) எனப்படுகின்றது. பொதுவாக கம்பனிகளின் நிதி, செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான முடிவுகள் இயக்குனர் சபையினாலேயே (Board of Directors) மேற்கொள்ளப்படுகின்றன. இயக்குனர் சபையில் அங்கம் வகிக்கும் இயக்குனர்கள் அக் கம்பனியின் பங்குதாரர்களாலேயே நியமிக்கப்படுகின்றனர். இந்த வகையில் பார்க்கும்போது ஒரு நிறுவனம் இன்னோர் நிறுவனத்தில் பின்வரும் சந்தர்ப்பங்களில் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்க முடியும்.

1. குறிப்பிட்ட நிறுவனம் இன்னோர் கம்பனியின் வாக்குரிமையுள்ள பங்குகளில் அரைவாசிக்கு மேலதிகமாக (அதாவது 50% க்கு மேலாக) கொள்வனவு செய்திருத்தல். இதன் மூலம் வாக்குரிமையில் 50% க்கு மேலதிகமாகக் கொண்டிருக்கமுடியும்.

2. குறிப்பிட்ட கம்பனி, மற்றைய கம்பனியில் அரைவாசிக்கு மேற்பட்ட வாக்குரிமையுள்ள பங்குகளை தனியே கொண்டிராவிடினும், ஏனைய பங்குதாரர்களுடன் செய்துள்ள உடன்படிக்கையின் பிரகாரம் அரைவாசிக்கு மேற்பட்ட வாக்குரிமைப் பலத்தைக் கொண்டிருத்தல்.

3. குறிப்பிட்ட கம்பனி சட்ட ரீதியாகவோ அல்லது உடன்படிக்கையின் பிரகாரமோ மற்றைய கம்பனியின் நிதி மற்றும் செயற்பாட்டுக் கொள்கைகளில் செல்வாக்குச் செலுத்தும் சக்தியைக் கொண்டிருத்தல்.

4. குறிப்பிட்ட கம்பனி, மற்றைய கம்பனியின் இயக்குனர் சபையில் பெரும்பான்மையானவர்களை நியமிக்கவோ அல்லது அகற்றவோ அதிகாரம் கொண்டிருத்தல்.

5. குறிப்பிட்ட கம்பனி மற்றைய கம்பனியின் இயக்குனர் சபைக் கூட்டங்களில் பெரும்பான்மை வாக்குகளை அளிக்கக்கூடியதாக இருத்தல்.

6. ஓர் நிறுவனம் இன்னோர் நிறுவனத்தில் மேற்கூறப்பட்ட வழிகளில் ஏதாவது ஒன்றின்படி கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் போது அந்நிறுவனம் இன்னுமோர் நிறுவனத்தில் மேற்கூறப்பட்டத்தின்படி, கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பின் அந்த மூன்றாவது நிறுவனத்திலும் முதலாவது நிறுவனம் தன்னியல்பாகவே கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். இது நேரில் கட்டுப்பாடு. (Indirect control) எனப்படும்.

இங்கு கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள நிறுவனம் பிடிப்புக் கம்பனி (Holding Company) எனவும் கட்டுப்படுத்தப்படும் கம்பனி உபகம்பனி (Subsidiary Company) எனவும் அழைக்கப்படும். மேலே (6) இல் கூறப்பட்டதன்படி, முதலாவது நிறுவனம் பிடிப்புக் கம்பனி எனவும், இரண்டாவது நிறுவனம் உப கம்பனி எனவும், மூன்றாவது நிறுவனம் உபஉப கம்பனி (Sub-Subsidiary Company) எனவும் அழைக்கப்படும். உதாரணமாக, A, B, C என்னும் மூன்று

நிறுவனங்களை எடுத்துக்கொள்வோம். B கம்பனி A கம்பனியின் உப நிறுவனமாகும். C கம்பனி B கம்பனியின் உப நிறுவனமாகும். எனவே, C கம்பனியை A கம்பனியும் மறைமகமாகக் கட்டுப்படுத்த முடியும். இதனால் C கம்பனி A கம்பனியின் உபஉப (Sub-Subsidiary) நிறுவனமாகும். B யையும் C யையும் தனித்து நோக்கும்போது B பிடிப்பு நிறுவனமாகவும் C உப நிறுவனமாகவும் விளங்கும். ஒரு பிடிப்பு கம்பனியையும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உப கம்பனி / கம்பனிகளையும் கொண்ட ஒரு தொகுதியே தொகுதி நிறுவனங்கள் (Group of companies) என அழைக்கப்படும்.

தொகுதி நிறுவனங்களால் தயாரிக்கப்படும் நிதி அறிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றிற்கு அமைவாகவே தயாரிக்கப்படல் வேண்டும்.

1. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கைக் கம்பனிச் சட்டம்.

2. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 26 - திரட்டிய நிதி அறிக்கைகளும் உப நிறுவுனங்களில் செய்யப்படும் முதலீடுகளுக்கான கணக்கீடும்.

மேற்கூறியவற்றின்படி, ஒரு பிடிப்பு நிறுவனம் நிதி அறிக்கைகளை சமர்ப்பிக்கும் போது தனியே தனது நிதி அறிக்கைகளை மட்டும் சமர்ப்பித்தால் போதாது. திரட்டிய நிதி அறிக்கைகளையும் (Consolidated financial statements) சமர்ப்பிக்க வேண்டும். இதன் அடிப்படையில் பிடிப்பு நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதி அறிக்கைகளாவன.

1. பிடிப்பு நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் :
   - அ) ஐந்தொகை
   - ஆ) இலாபநட்டக் கணக்கு
   - இ) காசுப்பாய்ச்சல் கூற்று

2. திரட்டிய கணக்குகளானவை :
   - அ) திரட்டிய ஐந்தொகை
   - ஆ) திரட்டிய இலாபநட்டக் கணக்கு.
   - இ) திரட்டிய காசுப்பாய்ச்சல் கூற்று.

திரட்டிய நிதி அறிக்கைகளில் உள்நாட்டு, வெளிநாட்டு உப நிறுவனங்கள் எல்லாம் ஒன்றிணைக்கப்படல் வேண்டும்.

1.2 திரட்டிய நிதி அறிக்கைகளுக்கான அவசியம்

பிடிப்பு நிறுவனத்தின் பங்குதாரர்களால் பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமும் பிடிப்பு நிறுவனத்தில் அவர்களுக்குச் சொந்தமான நிதியுமே பொதுவாக உப நிறுவனத்தில் / நிறுவனங்களில் முதலீடு செய்யப்படுகின்றது. இதனால் உப நிறுவனம் / நிறுவனங்களில் நடைபெறும். ஒவ்வொரு நடவடிக்கையின் விளைவும் (இலாபம் / நட்டம்) பிடிப்பு நிறுவனத்தின் பங்குதாரர்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் பிடிப்பு நிறுவனப் பங்குதாரர் பிடிப்பு நிறுவனத்தின் வியாபார முடிவுகள், தேறிய சொத்துக்களை அறிவதில் காட்டும் அக்கறை போன்று, உப நிறுவனத்தின் வியாபார முடிவுகளையும் தேறிய சொத்துக்களையும் அறிவதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். இவர்கள் தாங்கள் பங்களிப்புச் செய்த நிதிக்கு பிடிப்பு நிறுவனத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை மட்டுமல்லாது (உப நிறுவனம் / நிறுவனங்களிலிருந்து

கிடைக்கும் வருமானம் உட்பட) மொத்த வருமானத்தை அறிவதில் அக்கறை காட்டுகின்றனர். எனவே, பிடிப்பு நிறுவனம் அவர்களுக்கு திரட்டிய கணக்குகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

1.3 திரட்டிய கணக்குகளிலிருந்து விலக்களித்தல்

ஒரு உப கம்பனி பின்வரும் சந்தர்ப்பங்களில் திரட்டிய கணக்குகள் சமர்ப்பித்தலிருந்து விலக்களிக்கப்படலாம்.

1. கட்டுப்பாடு தற்காலிகமானதாக இருந்தால் அண்மையில் விற்பனை செய்யும் நோக்குடன் பிடிப்புக் கம்பனி, உப கம்பனியில் பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தால்.

2. உப கம்பனி கடுமையான நீண்டகால நிதிக் கட்டுப்பாடுகளின் கீழ் இயங்கிக் கொண்டிருந்து அதன் மூலம் பிடிப்பு நிறுவனத்திற்கு நிதியினை மாற்றமுடியாத நிலைமை காணப்படின்,

3. ஒரு பிடிப்புக் கம்பனி இன்னோர் பிடிப்புக் கம்பனிக்கு முழுமையான (100% கட்டுப்பாடு) உப கம்பனியாக இருந்து, அதன் பிடிப்பு நிறுவனம் திரட்டிய நிதி அறிக்கைகளைத் தயாரித்தால் அக் கம்பனி திரட்டிய நிதி அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டியதில்லை.

உதாரணமாக பின்வரும் அமைப்பைப் பார்ப்போம்.

A —— 100% ——→ B —— 75% ——→ C

இங்கு B கம்பனி A கம்பனியில் முழுமையான உப கம்பனியாக இருப்பதால் B கம்பனி, Bஐயும் Cஐயும் இணைத்து திரட்டிய நிதி அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டியதில்லை.

4. தொகுதி நிறுவனத்திலுள்ள ஏனைய கம்பனிகளின் நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகையில் ஒரு உப கம்பனியின் நடவடிக்கை முற்றிலும் வேறுபட்டிருந்தால் அந்த உப கம்பனி திரட்டிய நிதி அறிக்கைகளிலிருந்து தவிர்க்கப்படலாம்.

1.4 துணைக் கம்பனி (Associate Company)

ஒரு துணைக் கம்பனி என்பது முதலீட்டாளர் ஒருவர் குறிப்பிடத்தக்களவு செல்வாக்குச் செலுத்தக்கூடியதாகவுள்ள ஒரு தொழில் முயற்சியாகும். (பொதுவாக ஒரு கம்பனியில் 20% முதல் 50% வரையிலான உரிமைப் பங்குகளைக் கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் கொள்வனவு செய்த கம்பனிக்கு, கொள்வனவு செய்யப்பட்ட கம்பனி துணைக் கம்பனி எனப்படுகின்றது) ஆனால் இது உப கம்பனியாகவோ அல்லது கூட்டுமுயற்சி முதலீடாகவோ இருக்கமாட்டாது. குறிப்பிடத்தக்க செல்வாக்கு என்பது முதலீடு செய்த கம்பனியில் நிதி மற்றும் தொழிற்பாட்டுக் கொள்கை சம்பந்தமான தீர்மானம் எடுத்தலில் பங்குபற்றும் அதிகாரமாகும். ஆனால் இவ்வித கொள்கைகளின் மீது கட்டுப்பாடு செலுத்த முடியாது.

முதலீடு செய்பவரது குறிப்பிடத்தக்க செல்வாக்கு என்பது வழக்கமாக பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழிகளில் வெளிப்படுகின்றது.

1. முதலீடு செய்யப்படும் கம்பனியின் இயக்குனர் சபையில் அல்லது அதற்குச் சமமான ஆளுநர் சபையில் அங்கத்-துவம் இருத்தல்.
2. கொள்கைவகுத்தல் செய்முறைகளில் பங்குபற்றல்.
3. முதலீடு செய்யும் கம்பனிக்கும் முதலீடு செய்யப்படும் கம்பனிக்கும் இடையில் முக்கியமான கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறல்.
4. முகாமைத்துவ ஆளணியை இடப்பரிமாற்றம் (Inter Exchange) செய்தல்.
5. இன்றியமையாத தொழில்நுட்ப தகவலை அளித்தல்.

அத்தியாயம் இரண்டு

திரட்டிய ஐந்தொகை (Consolidated Balance Sheet) அடிப்படைத் தத்துவங்கள் (Basic principles)

2.1 திரட்டிய ஐந்தொகை (Consolidated Balance Sheet)

ஒரு திரட்டிய ஐந்தொகை பிடிப்புக் கம்பனியினதும் உபகம்பனி / கம்பனிகளினதும் சொத்துக்கள் பொறுப்புக்களை ஒன்று சேர்த்து தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இக் கம்பனிகளின் ஐந்தொகைகள் ஒரே திகதியைக் கொண்ட-வையாகக் காணப்படல் விரும்பத்தக்கதாகும். அவ்வாறில்லாது உப கம்பனியின் நிதி வருடம், பிடிப்புக் கம்பனியின் நிதி வருடத்துடன் இணங்காவிடில், பிடிப்புக் கம்பனியின் ஐந்தொகை திகதிக்கு முன்னர் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட உப கம்பனியின் ஐந்தொகையைப் பயன்படுத்தலாம். எவ்வாறாயினும் இரண்டு ஐந்தொகைகளுக்குமிடையிலான கால வேறுபாடு மூன்று மாதங்களுக்கு மேற்படலாகாது. மேலும் திரட்டிய ஐந்தொகை தயாரிக்கப்படும் திகதிக்கும், உபகம்பனியின் ஐந்தொகைத்

திகதிக்கும் இடையில் பின்வரும் விடயங்கள் நடைபெற்றிருப்பின் அவற்றிற்கும் செம்மையாக்கல்கள் செய்யப்படல் வேண்டும்.

1. உபகம்பனி கணிசமான நட்டத்தை அனுபவித்திருந்தால்
2. பிடிப்புக் கம்பனிக்கும் உப கம்பனிக்கும் இடையில் கணிசமான காசு, சொத்து மாற்றப்பட்டிருந்தால்
3. உபகம்பனியால் கணிசமான அளவு மூலதனச் செலவு செய்யப்பட்டிருந்தால்

இவ்வாறான சந்தர்ப்பத்தில் வேறுவேறு திகதிகளைக் கொண்ட ஐந்தொகைகள் ஒன்றிணைக்கப்படுவதால் கம்பனி-களுக்கிடையிலான மீதிகள் இணங்கமாட்டா. நடைமுறைக் கணக்குகளுக்கு இடையிலான மீதிகள் திரட்டிய ஐந்தொகையில் "வேறுபட்ட கணக்கீட்டுத் திகதிகளைக் கொண்ட கம்பனிகளின் ஒன்றிணைப்பினால் ஏற்பட்ட வேறுபாடு" எனக் காட்டப்படல் வேண்டும். அல்லது தனியான "தொங்கல் கணக்கில் " காட்டப்படல் வேண்டும்.

திரட்டிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது ஒரேவிதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஒரே மாதிரியான சந்தர்ப்பங்களில் நடைபெறும் நிகழ்வுகளுக்கும் ஒரே சீரான கணக்கீட்டுக் கொள்கை பயன்படுத்தப்படல் வேண்டும். இவ்வாறு ஒரே சீரான கணக்கீட்டுக் கொள்கையைப் பயன்படுத்துவது சாத்தியமாகாதவிடத்து அது வெளிப்படுத்தப்படல் வேண்டும். மேலும் திரட்டிய நிதிக்கூற்றுக்களில் வித்தியாசமான கணக்-கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்ட விடயங்களின் விகிதாசாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

2.2 இரத்துச் செய்தல் (Cancellation)

திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்க முற்படும் போது ஆரம்ப நடவடிக்கையாக நாம் இரண்டு விடயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

1. பிடிப்புக் கம்பனி, உபகம்பனி ஆகியவற்றின் ஐந்தொகைகளில் காணப்படும் விடயங்களில் ஒரு கம்பனியில் சொத்தாகவும், மற்றைய கம்பனியில் பொறுப்பாகவும் காணப்படும் விடயங்களை இரத்துச் செய்தல். இவற்றுக்கு உதாரணமாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அ) பிடிப்புக் கம்பனியின் சொத்துக்களில் காணப்படும் "முதலீடுகள்" அல்லது "உபகம்பனிப் பங்குகள்", உபகம்பனியின் பொறுப்புக்களில் காணப்படும் "பங்கு மூலதனத்துடன்" இரத்தாகும்.

ஆ) கம்பனிகளுக்கிடையிலான வியாபார நடவடிக்கைகள் காரணமாக ஒரு கம்பனியில் வருமதியாளராகவும், மற்றைய கம்பனியால் செல்மதியாளராகவும் காணப்படும் தொகைகள் இரத்தாகும்.

இ) ஒரு கம்பனியில் வருமதி உண்டியல்களாகவும் இன்னோர் கம்பனியில் செல்மதி உண்டியல்களாகவும் காணப்படும் தொகைகளும் இரத்தாகும்.

2 இரண்டு கம்பனிகளிலும் இரத்துச் செய்யப்படாத சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒன்று சேர்க்கப்பட்டு திரட்டிய ஐந்தொகை தயாரிக்கப்படும்.

உதாரணம் :- 1

H கம்பனி தனது உப கம்பனியான S கம்பனிக்கு ஒழுங்காக பொருட்களை விற்பனை செய்து வருகின்றது. 31 டிசம்பர் 1998 இல் இவ் இரண்டு கம்பனிகளினதும் ஐந்தொகைகள் வருமாறு :

H கம்பனி 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான ஐந்தொகை :

	ரூபா	ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள்:			
உருவச் சொத்துக்கள்			35,000
S கம்பனியில் 40,000 ரூபா 1.00 பங்குகள்			40,000
			75,000
நடைமுறைச் சொத்துக்கள் :			
இருப்பு		16,000	
வருமதியாளர் - S கம்பனி	2,000		
ஏனையவை	6,000	8,000	
வங்கி		1,000	
		25,000	
நடைமுறைப் பொறுப்புக்கள் :			
செல்மதியாளர்	13,000		
செல்மதி உண்டியல் - S கம்பனி	1,000	14,000	11,000
			86,000
மூலதனமும் ஒதுக்கங்களும் :			
70,000 ரூபா 1.00 சாதாரண பங்குகள்			70,000
ஒதுக்கங்கள்			16,000
			86,000

S கம்பனி 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான ஐந்தொகை :

	ரூபா	ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள்:			
உருவச் சொத்துக்கள்			45,000
நடைமுறைச் சொத்துக்கள் :			
இருப்புக்கள்		12,000	
வருமதியாளர்		8,000	
வருமதி உண்டியல்கள்		1,000	
		21,000	
நடைமுறைப் பொறுப்புக்கள் :			
வங்கி மேலதிகப் பற்று		3,000	
செல்மதியாளர் - H கம்பனி	2,000		
ஏனையவை	2,000	4,000	
		7,000	14,000
			59,000
மூலதனமும் ஒதுக்கங்களும் :			
40,000 ரூபா 1.00 சாதாரண பங்குகள்			40,000
ஒதுக்கங்கள்			19,000
			59,000

H கம்பனி, S கம்பனியில் பங்குகளைக் கொள்வனவு செய்த வேளையில் S கம்பனியின் ஒதுக்கங்களில் மீதிகள் எதுவுமில்லை எனக் கொண்டு H கம்பனியினதும் அதன் உபகம்பனியான S கம்பனியினதும் திரட்டிய ஐந்தொகையைத் தயார் செய்க.

விடை :

இரத்துச் செய்யப்பட வேண்டியவை :

அ) H கம்பனியின் சொத்தில் காட்டப்பட்டுள்ள "S கம்பனியில் பங்குகள் " ரூபா 40,000 S கம்பனியின் பொறுப்பில் காட்டப்பட்டுள்ள பங்கு மூலதனம் ரூபா 40,000 உடன் இரத்தாகும்.

ஆ) H கம்பனியின் சொத்தில் காட்டப்பட்டுள்ள வருமதியாளர் S கம்பனி (ரூபா 2,000) S கம்பனியில் பொறுப்பாகக் காட்டப்பட்டுள்ள செல்மதியாளர் H கம்பனி (ரூபா 2,000) யுடன் இரத்தாகும்.

இ) H கம்பனியின் புத்தகங்களில் பொறுப்பாகக் காட்டப்பட்டுள்ள "செல்மதி உண்டியல் - S கம்பனி", S கம்பனியின் புத்தகங்களில் சொத்தாகக் காட்டப்பட்டுள்ள "வருமதி உண்டியல் - H கம்பனி" யுடன் இரத்தாகும்.

இவை தவிர்ந்த ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒன்று கூட்டப்பட்டு பின்வருமாறு திரட்டிய ஐந்தொகை உரு-வாக்கப்படும்.

H கம்பனியினதும் அதன் உபகம்பனியான S லிமிட்டட்டினதும் 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகை.

	ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள் :		
உருவச் சொத்துக்கள் (35,000 + 45,000)		80,000
நடைமுறைச் சொத்துக்கள் :		
இருப்புக்கள் (16,000 + 12,000)	28,000	
வருமதியாளர் (6,000 + 8,000)	14,000	
வங்கி – H கம்பனி	1,000	
	43,000	
நடைமுறைப் பொறுப்புக்கள் :		
வங்கி மேலதிகப் பற்று – S கம்பனி	3,000	
செல்மதியாளர்கள் (13,000 + 2,000)	15,000	
	18,000	25,000
		105,000
மூலதனமும் ஒதுக்கங்களும் :		
70,000 ரூபா 1.00 பங்குகள்		70,000
ஒதுக்கங்கள் (16,000 + 19,000)		35,000
		105,000

குறிப்புக்கள் :

- திரட்டிய ஐந்தொகையில் பிடிப்புக் கம்பனியின் மூலதனம் மட்டுமே இடம்பெறும்.
- ஒரு கம்பனியின் வங்கிக் கணக்கில் சாதகமான மீதியும் மற்றைய கம்பனியின் வங்கியில் மேலதிகப் பற்றும் காணப்படும் போது அவை இரண்டும் ஒன்று சேர்க்கப்படுவதில்லை.

2.3 பகுதியாக இரத்துச்செய்தல் (Part cancellation)

முன்னர் 2.2 (i) இல் குறிப்பிட்டபடியான விடயங்கள் இரண்டு கம்பனிகளின் ஐந்தொகைகளிலும் காணப்படினும் இரண்டு ஐந்தொகைகளிலும் காணப்படும் தொகைகள் சம தொகைகளாகக் காணப்படாவிடின் அவற்றை முழுமையாக இரத்துச் செய்யமுடியாது. எனவே, அவற்றைப் பகுதியாகவே இரத்துச் செய்யமுடியும். பொதுவாக எந்த ஐந்தொகையில் காணப்படும் தொகை குறைவாகவுள்ளதோ அத்தொகையையே இரண்டு ஐந்தொகைகளிலும் இரத்துச் செய்யப்படமுடியும். பகுதியாக இரத்துச் செய்யப்பட வேண்டிய விடயங்களுக்கு பின்வருவனவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

அ) பிடிப்புக் கம்பனி உப கம்பனிப் பங்குகளை பெயரளவுப் பெறுமதியைவிட கூடுதலான அல்லது குறைவான விலைக்கு கொள்வனவு செய்திருக்கலாம். இதனால் பிடிப்புக் கம்பனியின் ஐந்தொகையில் சொத்துக்கள் அதன் கிரயத்தில் காட்டப்பட உபகம்பனியின் ஐந்தொகையில் பெயரளவுப் பெறுமதியில் காட்டப்படும். (இதனால் எழும் நன்மதிப்பு, மூலதன ஒதுக்கம் போன்றவை பின்னர் விளக்கப்படும்)

ஆ) பிடிப்புக் கம்பனி பெயரளவுப் பெறுமதியிலேயே பங்குகளைக் கொள்வனவு செய்திருப்பினும், உபகம்பனிப் பங்குகளை முழுமையாகக் கொள்வனவு செய்திராத சந்தர்ப்பங்களிலும் இரு தொகைகளும் வேறுபடும். (இவ்வாறான சந்தர்ப்பத்தில் கவனிக்கப்பட வேண்டிய சிறுபான்மையினர் என்னும் விடயம் பின்னர் விளக்கப்படும்)

இ) கம்பனிகளுக்கிடையிலான வியாபார நடவடிக்கைகள் காரணமாக எழும் மீதிகள் வழிக்காசு, வழிச்சரக்கு (Cash in

transit / Goods in transit) காரணமாக வேறுபடலாம். இதுவே நடைமுறைக் கணக்குகளின் வேறுபாட்டுக்குக் காரணமாகும்.

ஈ) ஒரு கம்பனியால் வழங்கப்பட்ட கடன்பத்திரங்களில் ஒரு பகுதியை மட்டும் மற்றைய கம்பனி கொள்வனவு செய்திருக்கலாம்.

உ) ஒரு கம்பனியால் பிறப்பிக்கப்பட்டு மற்றைய கம்பனியால் ஒப்புக் கொள்ளப்பட்ட வருமதி உண்டியல்கள் முழுவதும் அல்லது ஒரு பகுதி கழிவுடன் மாற்றப்பட்டிருந்தால்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்

அ) இரத்துச் செய்யப்படாத கடன்பத்திரங்கள் திரட்டிய ஐந்தொகையில் பொறுப்பாகக் காட்டப்படும்.

ஆ) கம்பனிகளுக்கிடையிலான வியாபார நடவடிக்கை காரணமான தொகைகளின் (அல்லது நடைமுறைக் கணக்குகளின்) வேறுபாட்டுக்குக் காரணமான வழிக்காசு, வழிச்சரக்கு போன்றவை திரட்டிய ஐந்தொகையில் இடம்பெறும்.

இ) வருமதி உண்டியல்களை கழிவுடன் மாற்றிய கம்பனி தனது ஐந்தொகையில் குறிப்பில் "நிகழத்தக்க பொறுப்பாக" அதைக் காட்டியிருக்கும். ஆனால் திரட்டிய ஐந்தொகையில் கம்பனிகள் ஒன்றிணைக்கப்படுவதால் அதில் இக் குறிப்பு தேவையற்றதாகும்.

உதாரணம் :- 2

கீழே தரப்படுபவை H கம்பனியினதும் அதன் உபகம்பனியான S கம்பனியினதும் 30 யூன் 1998 இல் உள்ளபடியான ஐந்தொகைகளாகும்.

H கம்பனி 30 யூன் 1998 இல் உள்ளபடியான ஐந்தொகை

	ரூபா '000	ரூபா '000
நிலையான சொத்துக்கள் :		
உருவச் சொத்துக்கள்		120
S கம்பனியின் முதலீடுகள் - கிரயத்தில்		
80,000 ரூபா 1.00 சாதாரண பங்குகள்		80
ரூபா 20,000 12% கடன்பத்திரங்கள்		20
		220
நடைமுறைச் சொத்துக்கள்		
இருப்புக்கள்	50	
வருமதியாளர்	35	
வருமதி உண்டியல் - S கம்பனி	5	
S கம்பனியுடன் நடைமுறைக் கணக்கு	18	
காசு	4	
	112	
செல்மதியாளர் - ஒருவருடத்துக்குள் செலுத்தப்பட வேண்டிய தொகைகள்		
செல்மதியாளர்	47	
வரி	15	
	62	
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்		50
		270
செல்மதியாளர் - ஒரு வருடத்தின் பின் செலுத்தப்பட வேண்டிய தொகைகள்		
10% கடன்பத்திரங்கள்		75
		195
மூலதனமும் ஒதுக்கங்களும்		
100,000 ரூபா 1.00 சாதாரண பங்குகள் முற்றாக செலுத்தப்பட்டவை		100
ஒதுக்கங்கள்		95
		195

குறிப்பு :
உண்டியல் கழிவுடன் மாற்றியது தொடர்பாக ரூபா 3,000 க்கு நிகழத்தக்க பொறுப்பு ஒன்று உள்ளது.

S கம்பனி 30 யூன் 1998 இல் உள்ளபடியான ஐந்தொகை

	ரூபா '000	ரூபா '000
நிலையான சொத்துக்கள் :		
உருவச் சொத்துக்கள்		100
நடைமுறைச் சொத்துக்கள்		
இருப்புக்கள்	60	
வருமதியாளர்	30	
காசு	6	
	96	
செல்மதியாளர் - ஒருவருடத்துக்குள் செலுத்தப்பட வேண்டிய தொகைகள்		
செல்மதியாளர்	8	
செல்மதி உண்டியல்கள் - H கம்பனி	8	
வரி	10	
H கம்பனியுடன் நடைமுறைக் கணக்கு	12	
	38	
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்		38
		158
செல்மதியாளர் - ஒரு வருடத்தின் பின் செலுத்தப்பட வேண்டிய தொகைகள்		
12% கடன்பத்திரங்கள்		50
		108
மூலதனமும் ஒதுக்கங்களும்		
80,000 ரூபா 1.00 சாதாரண பங்குகள் முற்றாக செலுத்தப்பட்டவை		80
ஒதுக்கங்கள்		28
		108

பின்வருவனவற்றைக் கவனத்திற்கொண்டு திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்க.

1. H கம்பனி S கம்பனிப் பங்குகளைக் கொள்வனவு செய்த போது S கம்பனியின் ஒதுக்கக் கணக்கில் மீதி எதுவுமில்லை.

2. நடைமுறைக் கணக்கு மீதிகளின் வித்தியாசத்துக்கு வழிச்சரக்கு காரணமாகும்.

விடை:

H கம்பனி 30 யூன் 1998 இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகை :

		ரூபா '000	ரூபா '000
நிலையான சொத்துக்கள் :			
உருவச் சொத்துக்கள்	120+100		220
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	50+60	110	
வழிச்சரக்கு	18 - 12	6	
வருமதியாளர்	30+35	65	
காசு	4+6	10	
		191	
செல்மதியாளர் - ஒருவருடத்துக்குள் செலுத்-தப்பட வேண்டிய தொகைகள்			
செல்மதியாளர்	47+8	55	
செல்மதி உண்டியல்கள் - H கம்பனி	8 - 5	3	
வரி	15+10	25	
		83	
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்			108
			328
செல்மதியாளர் - ஒரு வருடத்தின் பின் செலுத்-தப்பட வேண்டிய தொகைகள்			
10% கடன்பத்திரங்கள்		75	
12% கடன்பத்திரங்கள்	(50 - 20 ·)	30	105
			223
மூலதனமும் ஒதுக்கங்களும்			
80,000 ரூபா 1.00 சாதாரண பங்குகள் முற்றாக செலுத்தப்பட்டவை			100
ஒதுக்கங்கள்	(28+95)		123
			223

குறிப்புக்கள் :

1. நிகழத்தக்க பொறுப்பு காட்டப்படத் தேவையில்லை.
2. 12% கடன்பத்திரங்களில் இரத்துச் செய்யப்படாத மிகுதி ரூபா 30,000 பொறுப்பாகக் காட்டப்பட்டுள்ளது.
3. நடைமுறைக் கணக்குகளின் வித்தியாசம் ரூபா 6,000 வழிச் சரக்காகக் காட்டப்பட்டு, நடைமுறைக் கணக்குகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

2.4 சிறுபான்மையினர் பங்கு (Minority Interest)

பிடிப்புக் கம்பனி உபகம்பனிப் பங்குகள் முழுவதையும் கொள்வனவு செய்யாத சந்தர்ப்பங்களில், பிடிப்புக் கம்பனியால் கொள்வனவு செய்யப்படாத பங்குகளை வெளியாட்கள் கொள்வனவு செய்திருப்பர். அவ்வாறு பங்குகளைக் கொள்வனவு செய்த வெளியாட்கள் "சிறுபான்மையினர்" (Minorities) என அழைக்கப்படுவர். திரட்டிய ஐந்தொகை தயாரிக்கப்படும் போது உபகம்பனியின் மொத்தச் சொத்துக்கள் பொறுப்புக்கள் பிடிக்கம்பனியின் சொத்துக்கள் பொறுப்புக்களுடன் ஒன்றிணைக்கப்படுவது வழக்கம். உபகம்பனியின் தேறிய சொத்துக்களில் சிறுபான்மையினருக்குச் சேரவேண்டிய விகிதாசாரம் 'சிறுபான்மையினர் பங்கு' என அழைக்கப்படும். இது திரட்டிய ஐந்தொகையில் தனியாக பொறுப்பாகக் காட்டப்படும்.

ஒரு கம்பனியின் தேறிய சொத்துக்கள் அக் கம்பனியின் மூலதனத்தாலும் ஒதுக்கங்களாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும். எனவே, சாதாரண பங்குகள், ஒதுக்கங்கள், முன்னுரிமைப் பங்குகள் என்பவற்றில் சிறுபான்மையினருக்குரிய விகிதாசாரத்தின் அடிப்படையில் "சிறுபான்மையினர் பங்கு" கணிக்கப்படும்.

உதாரணம் :- 3

H கம்பனி S கம்பனி உருவாக்கப்பட்ட வேளை அதன் பங்குமுதலில் 75% ஐக் கொள்வனவு செய்திருந்தது. 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான ஐந்தொகைகள் வருமாறு :

H கம்பனியின் ஐந்தொகை:

	ரூபா
நிலையான சொத்துக்கள் :	
உருவச் சொத்துக்கள்	50,000
S கம்பனியின் 30,000 பங்குகள் - கிரயத்தில்	30,000
	80,000
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்	25,000
	105,000
மூலதனமும் ஒதுக்கங்களும்	
80,000 ரூபா 1.00 சாதாரண பங்குகள்	80,000
ஒதுக்கங்கள்	25,000
	105,000

S கம்பனியின் ஐந்தொகை

	ரூபா
நிலையான சொத்துக்கள் :	
உருவச் சொத்துக்கள்	35,000
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்	15,000
	50,000
மூலதனமும் ஒதுக்கங்களும்	
40,000 ரூபா 1.00 சாதாரண பங்குகள்	40,000
ஒதுக்கங்கள்	10,000
	50,000

திரட்டிய ஐந்தொகையைத் தயார் செய்க.

இங்கு சிறுபான்மையினர் பங்கு பின்வருமாறு கணிப்பிடப்படும்.

		ரூபா
பங்குமூலதனம் ரூபா 40,000 x 25%		10,000
ஒதுக்கங்கள் ரூபா 10,000 x 25%		2,500
		12,500

பங்கு மூலதனத்தில் சிறுபான்மையினரது பங்கு ரூபா 10,000 தவிர்ந்த மிகுதி ரூபா 30,000 H கம்பனியின் முதலீட்டுடன் இரத்தாகும்.

ஒதுக்கங்களின் மிகுதி (ரூபா 10,000 - ரூபா 2,500) ரூபா 7,500 H கம்பனியின் ஒதுக்கங்கள் ரூபா 25,000 த்துடன் கூட்டப்பட்டு ரூபா 32,500 திரட்டிய ஒதுக்கங்கள் என திரட்டிய ஐந்தொகையில் காட்டப்படும்.

ஏனைய விடயங்கள் முன்னர் காட்டப்பட்டது போன்று ஒன்று சேர்க்கப்பட்டு திரட்டிய ஐந்தொகையில் இடம்பெறும்.

H கம்பனியினதும் அதன் உபகம்பனியான S கம்பனியினதும் 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகை.

	ரூபா
நிலையான உருவச் சொத்துக்கள்	85,000
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்	40,000
	125,000
பங்கு மூலதனம்	80,000
ஒதுக்கங்கள்	32,500
	112,500
சிறுபான்மையினர் பங்கு	12,500
	125,000

Capital + Reserve = Net assets.

2.5 நன்மதிப்பு (Goodwill)

பிடிப்புக் கம்பனி உபகம்பனியில் பங்குகளைக் கொள்வனவு செய்யும்போது, பங்குகளுடன் அத்திகதியில் காணப்படும் உபகம்பனியின் ஒதுக்கங்களையும் சேர்த்தே கொள்வனவு செய்கின்றது எனக் கொள்ளவேண்டும். ஏனெனில், ஒரு கம்பனியின் மூலதனமும் ஒதுக்கங்களும் அதன் தேறிய சொத்துக்களுக்கு சமமாக இருப்பதுடன், அவைகளும் அதன் உரிமைப் பங்குதாரர்களுக்கே உரியது என்பதனாலாகும்.

உதாரணமாக, H கம்பனி S கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்த போது S கம்பனியின் ஐந்தொகையில் மூலதனமும் ஒதுக்கங்களும் பின்வருமாறு காணப்படுகின்றது எனக் கொள்வோம்.

	ரூபா
பங்குமுதல்	100,000
ஒதுக்கங்கள்	80,000
	180,000

இதன்படி, S கம்பனியின் தேறிய சொத்துக்களும் ரூபா 180,000 க்கு சமமாக இருக்கும். எனவே, H கம்பனி இப் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக கொடுக்கும் தொகையானது ரூபா 180,000 க்கு சமமான தேறிய சொத்துக்களுக்காக கொடுக்கப்பட்டதாகக் கொள்ளவேண்டும்.

* பிடிப்புக் கம்பனி உபகம்பனிப் பங்குகளுக்காகக் கொடுத்த தொகைக்கும் (இது பிடிப்புக் கம்பனியின் ஐந்தொகையில் முதலீடுகள் எனக் காட்டப்பட்டிருக்கும்)

Investment

கொள்வனவு செய்த திகதியிலுள்ள உபகம்பனியின் தேறிய சொத்துக்களுக்கும் (இது பங்குமுதல் ஒதுக்கங்களிலிருந்து கணிக்கப்படும்) இடையிலான வித்தியாசம் நன்மதிப்பு அல்லது மூலதன ஒதுக்கமாகும்.

முதலீடுகளின் கிரயம் தேறிய சொத்துக்களின் பெறுமதியை விடக் கூடுதலாக இருப்பின் அவற்றுக்கிடையிலான வித்தியாசம் நன்மதிப்பு (Goodwill) எனப்படும். முதலீடுகளின் கிரயத்தைவிட தேறிய சொத்துக்களின் பெறுமதி கூடுதலாக இருப்பின் வித்தியாசம் மூலதன ஒதுக்கம் (Capital reserve) அல்லது எதிர்மறை நன்மதிப்பு (Negative goodwill) எனப்படும்.

நன்மதிப்பு அல்லது மூலதன ஒதுக்கத்தைக் கணிப்பதற்காக செய்யப்படும் ஒரு கணக்கே கட்டுப்பாட்டுச் செலவு (Cost of control) கணக்காகும்.

நன்மதிப்பு தொடர்பான கணக்கீடு (Accounting for goodwill)

திரட்டிய கணக்குகள் தயாரிக்கும் போது எழுகின்ற நன்மதிப்பினை இரண்டு விதமாகக் கையாளலாம்.

1. நன்மதிப்பினை உடனடியாக திரட்டிய ஒதுக்கங்களிலிருந்து (Consolidated reserves) பதிவழித்தல்.
2. நன்மதிப்பினை ஒரு சொத்தாக புத்தகங்களில் பேணி அதனை அதன் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தில் பகுதி பகுதியாக பதிவழிப்புச் செய்தல் (Amortization)

இதில் முதலாவது முறையே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. எதிர்மறை நன்மதிப்பை (Negative goodwill)

பொறுத்தவரை அது திரட்டிய போதுள்ள மூலதன ஒதுக்கம் (Capital reserve on consolidation) என திரட்டிய ஐந்தொகையில் காட்டப்படல் வேண்டும்.

2.6 கொள்வனவுக்கு முந்திய ஒதுக்கங்களும் கொள்வனவுக்கு பிந்திய ஒதுக்கங்களும்
(Pre acquisition reserve and Post acquisition reserve)

பிடிப்பு நிறுவனத்தைப் பொறுத்தவரை உபகம்பனியின் இலாபங்கள், ஒதுக்கங்கள் என்பவற்றில் பங்குகளின் கொள்வனவுக்கு முந்திய தொகை, பிந்திய தொகை என்ற வேறுபாடு மிக முக்கியமானதாகும். ஏனெனில் கொள்வனவுக்கு முந்திய (பொதுவாக கொள்வனவு செய்த திகதியில் குறிப்பிட்ட கணக்கிலுள்ள மீதி) இலாபம், ஒதுக்கம் என்பன மூலதனத்தன்மை வாய்ந்தவை. எனவே, இவை கட்டுப்பாட்டுச் செலவு கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். கொள்வனவுக்கு பிந்திய இலாப ஒதுக்கம் என்பன வருமானம் என்ற அடிப்படையில் திரட்டிய இலாபநட்டக் கணக்கு, திரட்டிய ஒதுக்கக் கணக்குகளுக்கு மாற்றப்படும். சிறுபான்மையினரைப் பொறுத்தவரை இந்த வேறுபாடு அவசியமற்றதாகும். திரட்டிய கணக்குகள் தயாரிக்கப்படும் போதுள்ள இலாபம், ஒதுக்கத்தில் அவர்களுக்குரிய பங்கை சிறுபான்மையினர் பங்குக்கு மாற்றினால் போதுமானதாகும்.

2.7 கொள்வனவுக்கு முந்திய உபகம்பனிப் பங்கிலாபமும் வட்டியும்
(Pre-aquisition dividends and interest from subsidiaries)

பிடிப்புக் கம்பனி உபகம்பனிப் பங்குகளை பங்கிலாபத்துடன் சேர்த்து கொள்வனவு செய்திருந்தால் கொள்வனவு

செய்த திகதிக்கு முன்னைய காலப்பகுதிக்கான பங்கிலாபம் மூலதன இலாபமாகக் கொள்ளப்பட்டு, குறிப்பிட்ட பங்குகளின் முதலீட்டுக் கணக்கில் செலவு வைக்கப்படும். இதன் காரணமாக முதலீட்டின் பெறுமதி குறிப்பிட்ட பங்கிலாபத்தினால் குறைக்கப்படுகின்றது. இதன் பின்பே முதலீட்டுக் கணக்கு மீதி கட்டுப்பாட்டுச் செலவுக் கணக்கிற்கு கொண்டும் செல்லப்படும். கொள்வனவுக்குப் பிந்திய காலப்பகுதிக்கான பங்கிலாப இலாபநட்டக் கணக்கிற்கு கொண்டு செல்லப்படும். பரீட்சை வினாக்களில் கொள்வனவுக்கு முந்திய பங்கிலாபம் தவறுதலாக இலாபநட்டக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு விட்டதாக குறிப்பிடப்படுவது உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பங்கிலாபத் தொகையை இலாபநட்டக் கணக்கில் வரவு வைத்து முதலீட்டுக் கணக்கில் செலவு வைத்தல் வேண்டும். உரிமைப் பங்குகளைப் போன்றே முன்னுரிமைப் பங்குகளும் பங்கிலாபத்துடன் சேர்த்து கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் கொள்வனவுக்கு முந்திய முன்னுரிமைப் பங்கிலாபம் உரிமைப் பங்குகளுக்குச் செய்யப்பட்டது போன்றே முன்னுரிமைப் பங்கு முதலீட்டுக் கணக்கில் செலவு வைக்கப்படும்.

தொகுதிக்கடன் பத்திரங்களைப் பொறுத்தவரை கொள்வனவுக்கு முந்திய காலப்பகுதிக்கான வட்டி தொகுதிக்கடன் முதலீட்டுக் கணக்கில் செலவு வைக்கப்படும்.

2.8 திரட்டிய கணக்குகளில் தேறாத இலாபம் (Unrealized profit in consolidated accounts)

தொகுதி நிறுவனங்களுக்கிடையில் அதாவது பிடிப்புக் கம்பனிக்கும் உபகம்பனிக்கும் இடையே அல்லது உபகம்பனிகளுக்கிடையே வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டி-

ருக்கலாம். உதாரணமாக பொருட்கள் அல்லது நிலையான சொத்துக்கள் இக் கம்பனிகளுக்கிடையில் பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கலாம். இவ்வாறான பரிமாற்றங்களின் போது விற்பனை செய்யும் கம்பனி கொள்விலையுடன் குறிப்பிட்ட இலாபத்தைச் சேர்த்தே விற்பனை செய்வது வழக்கம்.

தொகுதிக் கம்பனிகளுக்கிடையே பொருட்கள் (சரக்கு) மாற்றம் செய்யப்பட்டிருப்பின், அப்பொருட்களைக் கொள்வனவு செய்த நிறுவனம் முழுப் பொருட்களையும் விற்பனை செய்திருந்தால் செம்மையாக்கல் எதுவும் தேவையற்றதாகும். சிலவேளைகளில் முழுவதும் அல்லது ஒரு பகுதி விற்பனை செய்யப்படாமல் இருந்தால் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் இலாபம் தேறாத இலாபம் எனக் கொள்ளப்பட்டு, அதற்கு திரட்டிய கணக்குகளில் செம்மையாக்கல்கள் செய்யப்படல் வேண்டும். தேறாத இலாபம் என்பது கைக்குக் கிடைக்காத இலாபம் எனப் பொருள்படும். திரட்டிய கணக்குகள் தயாரிக்கப்படும் போது பிடிப்புக் கம்பனியும் உபகம்பனி அல்லது உபகம்பனிகளும் ஒரே நிறுவனமாகக் காட்டப்படுவதால், பொருட்கள் தொகுதி நிறுவனத்தின் கொள்விலை அல்லது கைத்தேறத்தக்க பெறுமதி அதில் எது குறைவானதோ அப்பெறுமதியிலேயே காட்டப்படல் வேண்டும். இதன் காரணமாக விற்பனை செய்யப்படாத பொருட்கள் அல்லது நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் இலாபம் (அதாவது தேறாத இலாபம்) அவற்றிலிருந்து கழிக்கப்படல் வேண்டும். எனினும், இவற்றை செம்மையாக்குவதற்கு பல்வேறு முறைகள் பின்பற்றப்படுகின்றன. நிலையான சொத்துக்களாயின் பெறுமானத்தேய்வும் கவனத்தில் கொள்ளப்பட்டு திரட்டிய கணக்குகள் தயாரிப்பின் செம்மையாக்கப்படல் வேண்டும்.

தேறாத இலாப ஏற்பாடு செம்மையாக்கப்படும் முறைகள்

1. பிடிப்புக் கம்பனி உப கம்பனிக்கு பொருட்கள் அல்லது நிலையான சொத்துக்களை விற்பனை செய்திருந்தால் தேறாத இலாபம் முழுவதையும் குறிப்பிட்ட தொகுதி நிறுவனச் சொத்திலிருந்தும், திரட்டிய இலாபநட்டக் கணக்கிலிருந்தும் கழித்தல் வேண்டும்.

2. உபகம்பனி பிடிப்பு நிறுவனத்திற்கு விற்றிருந்தால்,
   - அ) தேறாத இலாபம் முழுவதையும் சொத்திலிருந்தும் இலாபத்திலிருந்தும் கழித்தல்.
   - ஆ) தேறாத இலாபத்தில் தொகுதி நிறுவனத்துக்குரிய பங்கை மட்டும் சொத்திலிருந்தும் இலாபத்திலிருந்தும் கழித்தல்.
   - இ) தேறாத இலாபம் முழுவதையும் சொத்திலிருந்து கழித்தல். தொகுதி நிறுவனத்துக்குரிய பங்கை இலாபத்திலிருந்தும், சிறுபான்மையினருக்குரிய பங்கை சிறுபான்மையினர் பங்கிலிருந்தும் கழித்தல்.

மேற்கூறிய மூன்று முறைகளில் எதனைப் பின்பற்றுவது என்பது நிறுவனத்தின் கொள்கையைப் பொறுத்ததாகவே அமையும். எனினும் (இ) வில் குறிப்பிடப்பட்ட முறையே சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

2.9 நிலையான சொத்து விற்பனை (Disposal of fixed assets)

தொகுதி நிறுவனங்களுக்கிடையில் நடைபெறும் சொத்து மாற்றத்தைப் பொறுத்தவரை விற்பனை செய்த கம்பனி இலாபம் அல்லது நட்டத்தைப் பதிவு செய்திருக்கும். கொள்வனவு செய்த கம்பனி தான் உண்மையில் கொடுத்த பணத்தினைக் கிரயமாக அதாவது வரலாற்றுக்கிரய அடிப்-

படையில் பதிவு செய்யும். மேலும் அக் கிரயத்திலேயே பெறுமானத்தேய்வையும் கணிப்பீடு செய்து பதிவுகளை மேற்கொண்டிருக்கும்.

ஆனால் முன்னர் பார்த்தது போல் திரட்டிய கணக்குகள் தயாரிப்பின் போது தொகுதி நிறுவனங்கள் ஒரு தனி நிறுவனமாக கொள்ளப்படுகின்ற காரணத்தால் திரட்டிய ஐந்தொகையில் சொத்துக்கள் தொகுதி நிறுவனத்திற்குரிய கிரயத்திலேயே காட்டப்படுவதுடன், அப் பெறுமதியின் அடிப்படையிலேயே பெறுமானத்தேய்வும் செய்யப்படல் வேண்டும்.

இதன் அடிப்படையில் சொத்து மாற்றம் தொடர்பாக இரண்டு செம்மையாக்கல்கள் செய்யப்படும்.

1. நிலையான சொத்து வருமான ஒதுக்கம் என்பவற்றில் சேர்ந்துள்ள தேறாத இலாபத்தினை (அல்லது நட்டத்தினை) செம்மையாக்கல். இது இருப்பு தொடர்பான தேறாத இலாபச் செம்மையாக்கலை ஒத்திருக்கும்.

2. சொத்தின் தொகுதி நிறுவனத்திற்குரிய கிரயத்தின் அடிப்படையில் திரண்ட பெறுமானத் தேய்வையும், வருமான ஒதுக்கத்தையும் செம்மையாக்கல்.

உதாரணம் :- 4

H கம்பனி S கம்பனியில் 60% மான உரிமைப் பங்குகளைக் கொள்வனவு செய்துள்ளது. 1.1.1998 இல் S கம்பனி ரூபா 10,000 கிரயமான பொறியொன்றை H கம்பனிக்கு ரூபா 12,500 க்கு விற்பனை செய்திருந்தது. இரண்டு கம்பனிகளும் 31 டிசம்பரில் தமது கணக்குகளைத் தயாரிக்கின்றன.

31.12.1998 இல் வருமான ஒதுக்கக் கணக்கு மீதிகள் வருமாறு :

H கம்பனி பொறிக்கு 10% தேய்வு செய்தபின் ரூபா 27,000

S கம்பனி பொறி விற்பனை இலாபத்தையும் சேர்த்து ரூபா 18,000

(கொள்வனவுக்கு முந்தியது)

H கம்பனியின் வருமான ஒதுக்கக் கணக்கைக் காட்டுக.

வருமான ஒதுக்கம் :

	ரூபா
மீதி H கம்பனி	27,000
S கம்பனி (18,000 – 2,500) 60%	9,300
பெறுமானத்தேய்வுக் குறைப்பு	
10% (12,500 – 10,000)	250
	36,550

வருமான ஒதுக்கம் S :

	ரூபா
மீதி	18,000
தேறாத இலாபம்	(2,500)
	15,500
திரட்டிய வருமான ஒதுக்கம் 15,500 x 60%	(9,300)
சிறுபான்மையினர் பங்கு 15,500 x 40%	(6,200)

சொத்து அதாவது பொறி கிரயமான ரூபா 10,000 க்கு குறைத்தெழுதப்படும். தொகுதி நிறுவன இலாபநட்டக் கணக்கு (ரூபா 2,500 x 60%) ரூபா 1,500 ஆல் குறைக்கப்பட்டு, ரூபா 250 ஆல் கூட்டப்படும். தேறிய விளைவாக ரூபா 1,250 ஆல் குறைக்கப்படும்.

2.10 சொத்து மறுபடி விலைமதிக்கப்படல் (Revaluation of assets)

பிடிப்புக் கம்பனி உபகம்பனிப் பங்குகளைக் கொள்வனவு செய்யும் திகதியில், உபகம்பனி தனது சொத்துக்களை "நியாயமான பெறுமதிக்கேற்றவாறு" (Fait value) மறுபடி விலைமதித்தல் வழமையாகும். இவ்வாறு மறுபடி விலைமதிக்கப்பட்டால் அதனைச் செம்மையாக்குவதற்கு இரண்டு முறைகள் உள்ளன.

1. உபகம்பனி மறுமதிப்பீட்டுத் தொகைகளை தனது புத்தகங்களில் பதிவு செய்திருந்தால் நாம் நேரடியாக திரட்டிய கணக்குகளைத் தயாரிக்கலாம்.

2. உபகம்பனி மறுமதிப்பீட்டுக்குத் தேவையான செம்மையாக்கல்கள் எதுவும் செய்யாத நிலைமை காணப்படின் திரட்டிய கணக்குகள் தயாரிப்பின் போது செம்மையாக்கல்கள் செய்யப்படல் வேண்டும். உபகம்பனியின் இலாபநட்டக் கணக்கு, ஐந்தொகையில் தேவையான செம்மையாக்கல்களைச் செய்த பின்பு, திரட்டிய கணக்குகளைத் தயாரிக்கலாம்.

பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய சொத்துக்கள் மறுமதிப்பீடு செய்யப்படின், அதனுடன் இணைந்ததாக சாட்டுதல் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு, திரண்ட பெறுமானத்தேய்வு என்பவற்றிலும் செம்மையாக்கல் செய்யப்படல் வேண்டும்.

உதாரணம் :- 5

H கம்பனி 1.4.1997 இல் S கம்பனியில் 75% சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்தது. அத்திகதியில் S கம்பனியின் நிலையான சொத்துக்களின் நியாயமான பெறுமதி, அவற்றின் புத்தகப் பெறுமதியிலும் ரூபா 23,000 ஆல் கூடுதலாகக் காணப்பட்டது. மேலும் அத்திகதியில் S கம்பனியின் வருமான ஒதுக்கம் ரூபா 21,000 ஆகும். 31.03.1998 இல் உள்ளபடியான இரு கம்பனிகளினதும் ஐந்தொகைகள் வருமாறு :

H கம்பனியின் ஐந்தொகை

	ரூபா '000
நிலையான சொத்துக்கள் :	
உருவச் சொத்துக்கள்	63
S கம்பனியின் முதலீடுகள் - கிரயத்தில்	51
	114
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்	62
	176
மூலதனமும் ஒதுக்கங்களும்	
ரூபா 1.00 சாதாரண பங்குகள்	80
பகிரப்படாத இலாபம்	96
	176

S கம்பனியின் ஐந்தொகை

	ரூபா '000
நிலையான சொத்துக்கள் :	
உருவச் சொத்துக்கள்	28
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்	33
	61
மூலதனமும் ஒதுக்கங்களும்	
ரூபா 1.00 சாதாரண பங்குகள்	20
பகிரப்படாத இலாபம்	41
	61

S கம்பனி 1.4.1997 இல் தனது நிலையான சொத்துக்களை மறுமதிப்பீடு செய்தமையால். 31.03.1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கு ரூபா 3,000 க்கு மேலதிக பெறுமானத்தேய்வு செய்யவேண்டும் எனக் கொள்க.

பகிரப்படாத இலாபம் - S கம்பனி

		ரூபா
கணக்குகளின்படி - 1.4.1997 இல் மீதி		21,000
மறுமதிப்பீட்டு மிகை		23,000
கொள்வனவுக்கு முந்திய இலாபம்		44,000
31.03.1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் (41 - 21)	20,000	
செம்மையாக்க வேண்டிய மேலதிக தேய்வு	(3,000)	17,000
செம்மையாக்கப்பட்ட பகிரப்படாத இலாபம் 31.03.1998 இல்		61,000

கட்டுப்பாட்டுச் செலவு 44,000 x 75%	33,000
திரட்டிய இலாபநட்டக் கணக்கு (61,000 – 44,000) x 75%	12,750
சிறுபான்மையினர் பங்கு 61,000 x 25%	15,250
	61,000

சிறுபான்மையினர் பங்கு

	ரூபா
பங்குமுதல்	5,000
இலாபநட்டக் கணக்கு - S	15,250
	20,250

திரட்டிய வருமான ஒதுக்கம்

	ரூபா
H கம்பனி	96,000
இலாபம் - S	12,750
நன்மதிப்பு	(3,000)
	105,750

நன்மதிப்புக் கணிப்பீடு :

		ரூபா
முதலீடு		51,000
பங்குமுதல் - S	15,000	
இலாபம் - S	33,000	48,000
நன்மதிப்பு		3,000

திரட்டிய ஐந்தொகைக்காக S கம்பனியின் நிலையான சொத்துக்கள் :

	ரூபா 1000
மீதி	28
மறுமதிப்பீட்டு மிகை	23
	51
மேலதிக தேய்வு	3
	48

திரட்டிய ஐந்தொகை	ரூபா
உருவச் சொத்துக்கள்	111,000
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்	95,000
	206,000
பங்குமுதல்	80,000
ஒதுக்கம்	105,750
சிறுபான்மையினர் பங்கு	20,250
	206,000

2.11. உபகம்பனியினால் வழங்கப்படும் உபகாரப் பங்குகள் (Bonus shares issued by subsidary)

உபகம்பனியின் உபகாரப் பங்குகளை பிடிப்புக் கம்பனி பங்குகளை கொள்வனவு செய்வதற்கு முன் வழங்கியிருந்தால் பொதுவாக பங்குமூலதனக் கணக்கும் ஒதுக்கக் கணக்கும் செம்மையாக்கப்பட்டிருக்கும். இதனால் புதிய பதிவுகள் எதுவும் தேவைப்படாது பங்குகள் கொள்வனவுக்கு சிறிது காலத்திற்கு முன்னரே உபகாரப் பங்குகள் வழங்கப்பட்டு அது கணக்குகளில் காட்டப்பட்டிருக்காவிடில், பங்கு மூலதனக் கணக்கிலும், பொருத்தமான ஒதுக்கக் கணக்கிலும் வேண்டிய செம்மையாக்கல்கள் செய்யப்பட்ட பின்பு, திரட்டிய கணக்குகளை ஆரம்பித்தல் இலகுவானது.

ஆனால் பிடிப்புக் கம்பனி கொள்வனவு செய்த பின்பு உபகாரப் பங்குகள் வழங்கப்பட்டிருந்தால் பிரச்சனை சற்று சிக்கல் நிறைந்ததாக காணப்படும். அதில் உபகாரப் பங்குகள் கொள்வனவுக்கு முந்திய இலாபத்திலிருந்தா பிந்திய இலாபத்திலிருந்தா வழங்கப்பட்டன என்பது முக்கியமான விடயமாகும்.

கொள்வனவுக்கு முந்திய ஒதுக்கத்திலிருந்து உபகாரப் பங்குகள் வழங்கப்பட்டிருந்தால் முதலில் உபகம்பனி ஒதுக்கத்தினை குறைத்து, உபகம்பனி பங்கு மூலதனத்தை கூட்டுதல் வேண்டும். பின்பு சாதாரண முறையில் கணக்குச் செய்யலாம்.

கொள்வனவுக்குப் பிந்திய ஒதுக்கத்திலிருந்து உபகாரப் பங்குகள் வழங்கப்பட்டிருப்பின் மூலதன ஒதுக்கத்திலிருந்தா அல்லது வருமான ஒதுக்கத்திலிருந்தா அவை வழங்கப்பட்டன என அறியப்படல் வேண்டும். மூலதன ஒதுக்கத்திலிருந்து வழங்கப்பட்டிருப்பின் எந்தவித செம்மையாக்கலும் தேவை-

யற்றது. ஆனால் இலாபநட்டக் கணக்கிலிருந்து அல்லது வேறு வருமான ஒதுக்கத்திலிருந்து வழங்கப்பட்டால் தொகுதி நிறுவனத்தின் பகிரக்கூடிய இலாபத்தை அது பாதிக்கும்.

இது நன்மதிப்பை எதுவிதத்திலும் பாதிக்காது. எனவே எதுவித செம்மையாக்கலும் செய்யப்படத் தேவையில்லை. நன்மதிப்பினை தொகுதி நிறுவன இலாபநட்டக் கணக்கிலிருந்து உடனடியாக பதிவழித்தல் வேண்டும். கொள்வனவுக்குப் பிந்திய இலாபத்தில் உபகாரப்பங்கு வழங்கிய தொகையில் H நிறுவனத்திற்குரிய பங்கு பகிரப்படக்கூடாது.

உதாரணம் :- 6

H கம்பனியினதும் S கம்பனியினதும் சுருக்கப்பட்ட ஐந்தொகைகள் வருமாறு :

	H கம்பனி	S கம்பனி
	ரூபா '000	ரூபா '000
தேறிய சொத்துக்கள்	84	42
S கம்பனியில் முதலீடுகள்	16	-
	100	42
பங்குமூலதனம்	30	10
இலாபநட்டக் கணக்கு	70	32
	100	42

H கம்பனி, S கம்பனியில் 90% பங்குகளை கொள்வனவு செய்திருந்தது. அவ்வேளை S கம்பனியின் இலாபநட்டக் கணக்கில் ரூபா 2,000 காணப்பட்டது.

S கம்பனி தற்போது கொள்வனவுக்குப் பிந்திய இலாபத்தை பயன்படுத்தி 1:2 என்ற விகிதத்தில் உபகாரப் பங்குகளை வழங்கியது.

நன்மதிப்புக் கணிப்பீடு :

			ரூபா
முதலீடு			16,000
பங்குமுதல் - S	10,000 x 90%	9,000	
இலாபம் - S	2,000 x 90%	1,800	(10,800)
நன்மதிப்பு			5,200

உபகாரப் பங்கு வழங்கலால் நன்மதிப்பின் பெறுமதி எந்த விதத்திலும் மாற்றமடையாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

சிறுபான்மையினர் பங்கு

	ரூபா
பங்குமுதல் - S 10,000 x 10%	1,000
இலாபநட்டக் கணக்கு – S 32,000 x 10%	3,200
	4,200

திரட்டிய இலாபநட்டக் கணக்கு

	ரூபா
இலாபநட்டக் கணக்கு - H	70,000
இலாபநட்டக் கணக்கு – (32,000 – 2,000) 90%	27,000
நன்மதிப்பு	(5,200)
மீதி	91,800

உபகாரப்பங்குகள் ரூபா 20,000. இந்த ரூபா 20,000 முன்னர் பகிரக்கூடியதாக இருந்தது. ஆனால் உபகாரப்பங்கு

வழங்கலின் பின் பகிர முடியாது. இதில் தொகுதி நிறுவனத்தின் பங்கு (20,000 x 90%) ரூபா 18,000.

திரட்டிய ஐந்தொகையில் இந்த ரூபா 18,000 பகிரப்பட முடியாதது எனக் குறிப்புக் காட்டினால் போதுமானது.

திரட்டிய ஐந்தொகை

தேறிய சொத்துக்கள்	126,000
பங்குமூலதனம்	30,000
திரட்டிய இலாபநட்டக் கணக்கு	91,800
சிறுபான்மையினர் பங்கு	4,200
	126,000

குறிப்பு :- திரட்டிய இலாபநட்டக் கணக்கில் அடங்கியுள்ள ரூபா 18,000 பகிரப்பட முடியாததாகும்.

2.1.2 பிடிப்புக் கம்பனி உபகம்பனியில் முன்னுரிமைப் பங்குகளையும் திபெஞ்சர்களையும் கொள்வனவு செய்தல் (Acquisition of preference shares and debentures)

பிடிப்புக் கம்பனி உபகம்பனியில் முன்னுரிமைப் பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தாலும் முன்னுரிமைப் பங்குகள் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பதில்லை. எனவே, எத்தனை வீதமான பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன என்பது முக்கியமற்றது. மேலும், ஒதுக்கங்களில் முன்னுரிமைப் பங்குதாரருக்கு எதுவித உரிமையுமில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

உபகம்பனியின் முன்னுரிமைப் பங்குகளில் பிடிப்பு நிறுவனம் கொள்வனவு செய்த தொகை, பிடிப்பு நிறுவனத்தில் சொத்தாகவுள்ள முன்னுரிமைப் பங்கு முதலீட்டுக் கணக்கிற்கு

மாற்றப்படும். அந்த முதலீட்டுக் கணக்கில் ஏதாவது மீதி காணப்படின் அந்த மீதி சாதாரண பங்குகளுக்காக செய்யப்படும் கட்டுப்பாட்டு செலவுக் கணக்கிற்கு மாற்றப்படும்.

உபகம்பனி முன்னுரிமைப் பங்குகளில் பிடிப்பு நிறுவனம் கொள்வனவு செய்தது போக, மிகுதியாகவுள்ள தொகை சிறுபான்மையினருக்குரியது. இது சிறுபான்மையினர் பங்கிற்கு மாற்றப்படும்.

இவ்வாறான முன்னுரிமைப் பங்குகளில் பெரும்பகுதியை சிறுபான்மையினர் கொண்டிருந்தாலும் அது சிறுபான்மையினர் பங்கிற்கே மாற்றப்படும். அத்துடன் உபகம்பனியின் முன்னுரிமைப் பங்குகளில் எதனையும் பிடிப்பு நிறுவனம் கொள்வனவு செய்யாத சந்தர்பப்ங்களில், முன்னுரிமைப் பங்குகள் முழுவதும் சிறு-பான்மையினர் பங்குக்கே மாற்றப்படும்.

பிடிப்புக் கம்பனி உபகம்பனியின் திபெஞ்சர்களை கொள்வனவு செய்திருந்தாலும் முன்னுரிமைப் பங்குகளுக்கு செய்வது போன்றே கணக்குகள் செய்யப்படும். ஆனால் உபகம்பனியின் திபெஞ்சர்களில் பிடிப்புக் கம்பனி கொள்வனவு செய்தது போக, மிகுதியாகவுள்ள திபெஞ்சர்கள் சிறுபான்மை-யினர் பங்கிற்கு மாற்றப்படுவதில்லை. பதிலாக ஒரு வருடத்-திற்குப் பின் செலுத்தப்பட வேண்டிய கடனாகக் காட்டப்படும்.

உதாரணம் :- 7

H கம்பனியினதும் அதன் உபகம்பனியான S கம்பனியினதும் ஐந்தொகைகள் 31 டிசம்பர் 1998 இல் பின்வருமாறு காணப்பட்டன. H கம்பனி S கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்த போது S கம்பனியின் ஒதுக்கங்களில் மீதி எதுவும், காணப்படவில்லை.

H கம்பனியின் ஐந்தொகை

		ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள் :			
உருவச் சொத்துக்கள்			31,000
S கம்பனியின் முதலீடுகள் - கிரயத்தில்			
12,000	ரூபா 1.00 சாதாரண பங்குகள்	16,000	
4,000	ரூபா 1.00 முன்னுரிமைப் பங்குகள்	5,000	
ரூபா 4,000	10% திபெஞ்சர்கள்	4,500	25,500
			56,500
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்			11,000
			67,500
மூலதனமும் ஒதுக்கங்களும் :			
ரூபா 1.00 சாதாரண பங்குகள்			40,000
வருமான ஒதுக்கங்கள்			27,500
			67,500

S கம்பனியின் ஐந்தொகை

	ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள் :		
உருவச் சொத்துக்கள்		34,000
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்		22,000
		56,000
நீண்டகாலக் கடன்கள் : 10% திபெஞ்சர்கள்		10,000
		46,000
மூலதனமும் ஒதுக்கங்களும் :		
ரூபா 1.00 சாதாரண பங்குகள்		20,000
ரூபா 1.00 முன்னுரிமைப் பங்குகள்		16,000
மூலதன ஒதுக்கம்		6,000
வருமான ஒதுக்கம்		4,000
		46,000

S கம்பனியில் திபெஞ்சர்கள்:	
மீதி	4,500
S கம்பனியில் திபெஞ்சர்கள்	
கட்டுப்பாட்டு செலவு கணக்கு	(4,000)
	500

முன்னுரிமைப் பங்குகள் - S கம்பனி	
மீதி	16,000
S கம்பனியில் முன்னுரிமைப் பங்கு முதலீடு	4,000
சிறுபான்மையினர்	12,000
	16,000

திபெஞ்சர்கள் - S கம்பனி	
மீதி	10,000
S கம்பனியில் திபெஞ்சர் முதலீடு	(4,000)
மீதி	6,000

திரட்டிய வருமான ஒதுக்கம்	
வருமான ஒதுக்கம் - H	27,500
வருமான ஒதுக்கம் - S (4,000 × 60%)	2,400
	29,900
நன்மதிப்பு	(5,500)
மீதி	24,400

திரட்டிய மூலதன ஒதுக்கம்	
வருமான ஒதுக்கம் - H	-
வருமான ஒதுக்கம் -S (6,000×60%)	3,600
	3,600

S கம்பனியில் முதலீடுகள் முன்னுரிமைப் பங்கு:	
மீதி	5,000
S கம்பனியின் முன்னுரிமைப் பங்குகள் பங்குகள்	(4,000)
கட்டுப்பாட்டுச் செலவு	1,000

சாதாரண பங்குகள் - S கம்பனி	
மீதி	20,000
கட்டுப்பாட்டு செலவு	12,000
சிறுபான்மையினர்	8,000
	20,000

கட்டுப்பாட்டு செலவு கணக்கு	
S கம்பனியில் சாதாரண பங்கு முதலீடு	16,000
S கம்பனியில் முன்னுரிமைப் பங்கு முதலீடு	1,000
S கம்பனியில் திபெஞ்சர் முதலீடு	500
	17,500
S கம்பனியில் சாதாரண பங்குகள்	(12,000)
நன்மதிப்பு	5,500

சிறுபான்மையினர் பங்கு	
சாதாரண பங்கு – S	8,000
முன்னுரிமைப்பங்கு – S	12,000
ஒதுக்கங்கள்:	
மூலதனம் 6,000× 40%	2,400
வருமானம் 4,000× 40%	1,600
	24,000

H கம்பனியினதும் அதன் உபகம்பனியான S கம்பனியினதும் 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகை.

	ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள் :		
உருவச் சொத்துக்கள்		65,000
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்		33,000
		98,000
நீண்டகாலக் கடன்கள் :		
10% திபெஞ்சர்கள்		6,000
		92,000
மூலதனமும் ஒதுக்கங்களும் :		
ரூபா 1.00 சாதாரண பங்குகள்		40,000
திரட்டிய மூலதன ஒதுக்கம்		3,600
திரட்டிய வருமான ஒதுக்கம்		24,400
சிறுபான்மையினர் பங்கு		24,000
		92,000

2.13 உபகம்பனியிலிருந்து கிடைக்கவேண்டிய பங்கிலாபங்களும் (சாதாரணம், முன்னுரிமை) திபெஞ்சர் வட்டியும் (Dividends receivable and debenture interest receivable)

உபகம்பனியிலிருந்து கிடைக்கவேண்டிய பங்கிலாபங்கள், திபெஞ்சர் வட்டி என்பன பிடிப்புக் கம்பனிக்கு வருமானமாகும். (கொள்வனவுக்கு முந்திய காலப்பகுதிக்குரியதாயின் மூலதனம்) உபகம்பனியிலிருந்து கிடைக்கவேண்டிய பங்கிலாபம், வட்டி என்பவற்றை பிடிப்புக் கம்பனி தனது கணக்குகளில் வருமானமாகப் பதிந்திருப்பின் அவ்வாறு பதியப்பட்ட தொகைகள் பிடிப்புக் கம்பனியின் ஐந்தொகையில் உபகம்பனியிலிருந்து வரவேண்டிய பங்கிலாபம், வட்டி என சொத்தாகக் காட்டப்பட்டி-

ருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உபகம்பனியின் பிரேரிக்கப்பட்ட பங்கிலாபங்களும், செலுத்த வேண்டிய வட்டியும் பிடிப்புக் கம்பனியில் சொத்தாகவுள்ள உபகம்பனிப் பங்கிலாபம், வட்டி என்பவற்றுடன் ஒப்பிடப்பட்டு கம்பனிகளுக்கிடையில் கடன்கள் என்ற வகையில் இரத்துச் செய்யப்படக்கூடிய தொகைகள் இரத்துச் செய்யப்படல் வேண்டும். இரத்துச் செய்யப்படாமலிருக்கும் பங்கிலாபமும் வட்டியும் சிறுபான்மை-யினருக்குரியதாகும். இவற்றைச் சிறுபான்மையினர் பங்கில் சேர்க்காமல் தனியே சிறுபான்மையினருக்குரிய சாதாரண பங்கிலாபம், முன்னுரிமைப் பங்கிலாபம், திபெஞ்சர் வட்டி என குறுங்காலக் கடனின் கீழ் திரட்டிய ஐந்தொகையில் காட்டவேண்டும்.

சிறுபான்மையினர் பங்கு நீண்டகாலக் கடன் என்ற வகையில் அடங்கும். அவற்றுள் அடக்கப்படும் பங்குமுதல், ஒதுக்கம் போன்றவை கம்பனி கலைக்கப்படும் காலத்திலேயே திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் பங்கிலாபம் அடுத்த வருட ஆரம்பத்தில் கொடுக்கப்பட வேண்டியதாகையால் குறுங்காலக் கடன்களின் கீழ் (ஒரு வருடகாலத்துக்குள் செலுத்தப்பட வேண்டிய தொகைகள்) காட்டப்படும்.

பிடிப்புக் கம்பனியின் ஐந்தொகையில் உபகம்பனி-யிலிருந்து கிடைக்கவேண்டிய பங்கிலாபம், வட்டி எனக் காட்டப்படாதிருந்தால் பிடிப்புக் கம்பனி அவற்றை தனது கணக்ககளில் பதியவில்லை என்பது கருத்தாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் திரட்டிய கணக்குகள் தயாரிக்கும் போது பிடிப்புக் கம்பனியின் கணக்குகளில் இவற்றை வருமதியாகவும், வருமான ஒதுக்கங்களில் வருமானமாகவும் பதிவு செய்ய வேண்டும். பின்பு மேலே குறிப்பிட்டபடி செம்மையாக்கல்களைச் செய்ய வேண்டும்.

2.14 இறுதிப் பங்கிலாபங்கள் (Final dividends)

பிடிப்புக் கம்பனியோ அல்லது உப கம்பனியோ இறுதிப் பங்கிலாபம் பிரேரிக்காத நிலையில், திரட்டிய கணக்குகள் தயாரிக்கும் போது இறுதிப் பங்கிலாபங்களைப் பிரேரிக்க வேண்டி நேரிடலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்வரும் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

* உபகம்பனியைப் பொறுத்தவரை பங்கிலாபம் பிரேரிக்கும் போது :

வருமான ஒதுக்கங்கள் (S)	வரவு	
பிரேரிக்கப்பட்ட முன்னுரிமைப் பங்கிலாபம் (S)		செலவு
பிரேரிக்கப்பட்ட சாதாரண பங்கிலாபம் (S)		செலவு

* உபகம்பனியினால் பிரேரிக்கப்பட்ட பங்கிலாபங்களில் பிடிப்புக் கம்பனிக்குரிய தொகைகளைக் கணக்கிட்டு அவற்றைப் பின்வருமாறு பதிதல் வேண்டும் .

வருமதி பங்கிலாபம் (H)	வரவு	
வருமான ஒதுக்கங்கள் (H)		செலவு

* பிடிப்புக் கம்பனி தனது பங்கிலாபத்தைப் பிரேரிக்கும் போது :

வருமான ஒதுக்கங்கள் (H)	வரவு	
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம் (H)		செலவு

- உபகம்பனி பிரேரிக்கப்பட்ட பங்கிலாபங்களும் பிடிப்புக் கம்பனியிலுள்ள வருமதி பங்கிலாபங்களும் சாத்தியமான

வரை இரத்துச் செய்யப்படும். மிகுதி அவ்வக் கணக்குகளில் மீதியாக விடப்பட்டு, திரட்டிய ஐந்தொகைக்கு கொண்டு செல்லப்படும்.

பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம்	(S)	வரவு
வருமதி பங்கிலாபம்	(H)	செலவு

பின்னர் வழமைபோல் திரட்டிய ஐந்தொகை தயாரிக்கப்படும்.

2.15 பங்குகளைப் பகுதிபகுதியாக கொள்வனவு செய்தல் (Piece-meal Acquisition of shares)

பிடிப்புக் கம்பனி உபகம்பனிப் பங்குகளை ஒரே தடவையில் கொள்வனவு செய்யாமல் பகுதி பகுதியாகவும் கொள்வனவு செய்வதுண்டு. இக் கொள்வனவை இரண்டு வகையாக நோக்கலாம்.

1. முதலில் கட்டுப்பாட்டுக்குரிய பங்குகளை (50% க்கு மேல்) கொள்வனவு செய்து, பின் மேலதிகமாக பங்குகளைக் கொள்வனவு செய்தல்.

2. முதலில் சிறிதளவு பங்குகளாகக் கொள்வனவு செய்து இரண்டு அல்லது மூன்று கொள்வனவுகளில் கட்டுப்பாட்டைப் பெறுதல்.

முதல் வகையைப் பொறுத்தவரை திரட்டிய கணக்குகளை இலகுவாகச் செய்ய முடியும். ஒவ்வொரு கொள்வனவின் போதும் கொள்வனவுக்கு முந்திய ஒதுக்கமும், கொள்வனவுக்குப் பிந்திய ஒதுக்கமும் கணிப்பிடப்பட்டு அதில் பிடிப்புக் கம்பனிக்குரிய பங்கு முறையே கட்டுப்பாட்டுச் செலவுக் கணக்கிற்கும், பிடிப்புக் கம்பனியின் ஒதுக்கக் கணக்கிற்கும் மாற்றப்படும்.

உதாரணம் :- 8

H கம்பனி S கம்பனில் பங்குகளை பின்வருமாறு கொள்வனவு செய்திருந்தது.

ஆண்டு	பங்குகளின் எண்ணிக்கை	கிரயம் (ரூபா)	வருமான ஒதுக்க மீதி S கம்பனியின் (ரூபா)
1995	60,000	80,000	40,000
1996	10,000	20,000	60,000
1997	20,000	35,000	100,000
	90,000	135,000	

1998 இல் S கம்பனியின் வருமான ஒதுக்கக் கணக்கு மீதி ரூபா 120,000 ஆகும். பங்கு மூலதனம் மொத்தம் 100,000 பங்குகளாகும்.

1998 இல் திரட்டிய கணக்குகள் தயாரிக்கப்படுவதாகக் கொண்டு ஒவ்வொரு கொள்வனவுக்கும் கொள்வனவுக்கு முந்திய, பிந்திய இலாபங்களைக் கணிக்க. (1995 இலிருந்து S கம்பனி பங்கிலாபம் எதனையும் வழங்கவில்லை எனக் கொள்க)

கொள்வனவுக்கு முந்திய இலாபம் (பிடிப்புக் கம்பனிக்குரியது)

1995 இல் 60% = ரூபா 40,000 x 60% = ரூபா 24,000

1996 இல் 10% = ரூபா 60,000 x 10% = ரூபா 6,000

1997 இல் 20% = ரூபா 100,000 x 20% = ரூபா 20,000

கொள்வனவுக்குப் பிந்திய இலாபம் (பிடிப்புக் கம்பனிக்குரியது)

இது பின்வருமாறு கணிக்கப்படும்.

$\frac{60\,000}{100\,000} \times 100 = 60\%$

(திரட்டிய கணக்குகள் தயாரிக்கப்படும் திகதியிலுள்ள இலாபம் - கொள்வனவுக்கு முந்திய இலாபம்) × பிடிப்புக் கம்பனி கொள்வனவு செய்த பங்குகளின் வீதம்

1995 இல் 60%	= (ரூபா 120,000 – ரூபா 40,000) x 60%	=	ரூபா 48,000
1996 இல் 10%	= (ரூபா 120,000 – ரூபா 60,000) x 10%	=	ரூபா 6,000
1997 இல் 20%	= (ரூபா 120,000 – ரூபா 10,000) x 20%	=	ரூபா 4,000

ஆனால் இரண்டாவது வகையைப் பொறுத்தவரை எவ்வளவு ஒதுக்கத்தை கட்டுப்பாட்டுச் செலவுக் கணக்கிற்கு மாற்றுவது, எவ்வளவு ஒதுக்கத்தை திரட்டிய ஒதுக்கத்திற்கு மாற்றுவது என்பது பிரச்சனைக்குரியதாகும்.

பொதுவாக, பிடிப்புக் கம்பனி உபகம்பனியின் பங்குகளை பகுதி பகுதியாக கொள்வனவு செய்ததன் நோக்கம் இறுதியில் உபகம்பனியில் கட:டுப்பாட்டைப் பெற்றுக்கொள்வதே என எடுகோள் கொள்ளப்படின், முதலாவது வகையில் குறிப்பிட்ட-தின்படி ஒவ்வொரு கொள்வனவின் போதும் கொள்வனவுக்கு முந்திய ஒதுக்கமும் பிந்திய ஒதுக்கமும் கணிப்பிடப்பட்டு அதில் பிடிப்புக் கம்பனிக்குரிய பங்கு முறையே கட்டுப்பாட்டுச் செலவுக் கணக்கிற்கும் பிடிப்புக் கம்பனியின் ஒதுக்கக் கணக்கிற்கும் மாற்றப்படும்.

உதாரணம் :- 9

H கம்பனி S கம்பனில் பங்குகளை பின்வருமாறு கொள்வனவு செய்திருந்தது எனக் கொள்க.

ஆண்டு	பங்குகளின் எண்ணிக்கை	S கம்பனியின் வருமான ஒதுக்க மீதி (ரூபா)
1995	20,000	40,000
1996	20,000	60,000
1997	40,000	100,000
	80,000	

1998 இல் S கம்பனியின் வருமான ஒதுக்கக் கணக்கு மீதி ரூபா 120,000 ஆகும். பங்கு மூலதனம் மொத்தம் 100,000 பங்குகளாகும்.

1998 இல் திரட்டிய கணக்குகள் தயாரிக்கப்படுவதாகக் கொண்டு கொள்வனவுக்கு முந்திய, பிந்திய இலாபங்களைக் கணிக்க. (1995 இலிருந்து S கம்பனி பங்கிலாபம் எதனையும் வழங்கவில்லை எனக் கொள்க)

கொள்வனவுக்கு முந்திய இலாபம் (பிடிப்புக் கம்பனிக்குரியது)

1995 இல் 20% (ரூபா 40,000) = ரூபா 8,000

1996 இல் 20% (ரூபா 60,000) = ரூபா 12,000

1997 இல் 40% (ரூபா 100,000) = ரூபா 40,000

கொள்வனவுக்குப் பிந்திய இலாபம் (பிடிப்புக் கம்பனிக்குரியது)

1995 இல் 20% (ரூபா 120,000 – ரூபா 40,000) x 60% = ரூபா 16,000

1996 இல் 40% (ரூபா 120,000 – ரூபா 60,000) x 10% = ரூபா 12,000

1997 இல் 40% (ரூபா 120,000 – ரூபா 100,000) x 20% = ரூபா 8,000

ஆனால் இறுதியில் கட்டுப்பாட்டைப் பெறுவதே பகுதி பகுதியாக பங்குகளைக் கொள்வனவு செய்வதன் நோக்கம் என்பது எடுகோளாகக் கொள்ளப்படாவிடின், எப்போது கட்டுப்பாடு கிடைக்கின்றதோ (அதாவது 50% க்கு மேற்பட்ட பங்ககள் கொள்வனவு செய்யப்படுகின்றதோ) அப்போதே கொள்வனவுக்கு முந்திய, பிந்திய இலாபம் கணிப்பிடப்பட வேண்டும்.

உதாரணம் :- 10

முன்னைய உதாரணத்தில் குறிப்பிட்ட எடுகோள் இல்லை எனக் கொண்டால் 1996 ஆம் ஆண்டில்தான் கட்டுப்பாடு கிடைப்பதாகக் கொண்டு அந்த ஆண்டிலேயே கொள்வனவுக்கு முந்திய, பிந்திய இலாபம் கணிப்பிடப்படல் வேண்டும். அதன்படி,

கொள்வனவுக்கு முந்திய இலாபம் :

1996 இல் 80% (ரூபா 100,000) = ரூபா 80,000

கொள்வனவுக்கு பிந்திய இலாபம் :

1996 இல் 80% (ரூபா 120,000 - ரூபா 100,000) = ரூபா 16,000.

அத்தியாயம் 3

பல கம்பனி அமைப்பு
MULTI COMPANY STRUCTURE

3.1 அறிமுகம்

பிடிப்புக் கம்பனி ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட உபகம்பனிகளைக் கொண்டிருக்கலாம் அல்லது ஒரு உபகம்பனி / கம்பனிகளையும் உப உப கம்பனி / கம்பனிகளையும் கொண்டிருக்கலாம். தொகுதி நிறுவனங்கள் என்பதற்குள் அவை அனைத்தும் அடக்கப்படும். இவ்வாறான தொகுதி நிறுவன அமைப்புக்கு சில உதாரணங்களை கீழே பார்ப்போம்.

அ) ஒன்றுக்கு மேற்பட்ட உபகம்பனிகள்
(Several Subsidiary companies)

(i)



இங்கு இரு கம்பனிகளிலும் H கம்பனி நேரடியான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.

ii)

இங்கு H கம்பனி நான்கு உபகம்பனிகளிலும் நேடியான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. S1 கம்பனியில் முழுமையான கட்டுப்பாட்டையும், ஏனையவற்றில் பகுதிக் கட்டுப்பாட்டையும் கொண்டுள்ளது.

ஆ) உப உப கம்பனிகள் **(Sub-subsidiary companies)**

i)

பிடிப்புக் கம்பனி (H)

| 80%

உபகம்பனி (S)

| 70%

உப உபகம்பனி (SS)

இங்கு H கம்பனி S கம்பனியில் நேரடிக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. S கம்பனி SS கம்பனியில் நேரடிக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. H கம்பனியைப் பொறுத்தவரை SS கம்பனி உபகம்பனியின் உப கம்பனி அதாவது உப உப கம்பனியாகும். H கம்பனி SS கம்பனியில் (80% × 70%) 56% மறைமுகக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.

ii)

H

| 60%

S

| 55%

SS

இங்கு S கம்பனி H கம்பனியின் உப கம்பனியாகும். SS கம்பனி S கம்பனியின் உபகம்பனியாகும். எனவே, SS கம்பனி H கம்பனியின் உப உபகம்பனியாகும். இங்கு H கம்பனி S கம்பனியின் ஊடாக SS கம்பனியைக; கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கின்ற போதும் SS கம்பனியின் சொத்துக்களில் H கம்பனிக்குள்ள உரிமை (60% x 55%) 33% மட்டுமே. உதாரணமாக SS கம்பனி ரூபா 100 பங்கிலாபம் வழங்கினால் ரூபா 60 மட்டுமே S கம்பனிக்கு கிடைக்கும். அந்த ரூபா 60 இல் ரூபா 33 (ரூபா 60 x 55%) மட்டுமே H கம்பனிக்கு கிடைக்கும்.

iii)



இங்கு :

- S கம்பனி W கம்பனியின் முழுமையான உப கம்பனியாகும்.
- Y கம்பனி W கம்பனியின் உபகம்பனி அல்ல.
- Z கம்பனி X கம்பனியின் உபகம்பனி அல்ல.
- எனவே, Z கம்பனி W கம்பனியின் உப உப கம்பனி அல்ல.

ஆனால் Z கம்பனியால் வழங்கப்படும் ரூபா 100 பங்கிலாபத்தில் ரூபா 75 ஐ W கம்பனி பெறக்கூடியதாக உள்ளது.

Z கம்பனியால் வழங்கப்படும் ரூபா 100 பங்கிலாபத்தில் X கம்பனியும் Y கம்பனியும் ரூபா 50 வீதம் பெறும்.

	ரூபா
X கம்பனிக்கு கிடைக்கும் பங்கிலாபம் முழுவதும் (100%) W கம்பனிக்கு கிடைக்கும் :	50
Y கம்பனிக்கு கிடைக்கும் பங்கிலாபத்தில் அரைப்பங்கு (50%) W கம்பனிக்கு கிடைக்கும்	25
மொத்தம்	75

W கம்பனி Z கம்பனியின் 75% சொத்துக்களுக்கு உரிமையாளராக இருக்கின்ற போதும், Z கம்பனி W கம்பனியின் ஒரு உபகம்பனியல்ல.

iv)



இங்கு S கம்பனி H கம்பனியின் உப கம்பனியாகும். இதனால் H கம்பனி SS கம்பனியில் 36% நேரில் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. மேலும் H கம்பனி SS கம்பனியில் நேரடியாக 20% பங்குகளைக் கொள்வனவு செய்துள்ளது. இதன் காரணமாக (36% + 20%) 56% கட்டுப்பாட்டை SS கம்பனி மீது H கம்பனி கொண்டுள்ளது. எனவே, SS கம்பனி H கம்பனியின் உப கம்பனியாகும். ஆனால் H கம்பனிக்கு SS கம்பனியின் 47% மான [20% + (75% x 36%)] சொத்துக்களிலேயே உரிமையுள்ளது என்பது முக்கியமான விடயமாகும்.

ஒரு கம்பனியில் இன்னோர் கம்பனி 50% க்கு மேற்பட்ட அல்லது அதற்குச் சமமான உரிமைப் பங்குகளை கொண்டுள்ளதா என்பதனை அறிவதற்கு பின்வரும் இரண்டையும் ஒன்றுசேர்க்க வேண்டும்.

அ) குறிப்பிட்ட கம்பனியால் மற்றைய கம்பனியில் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள்.

ஆ) குறிப்பிட்ட கம்பனியின் உபகம்பனியால் மற்றைய கம்பனியில் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள்.

மேலே உதாரணம் ஆ (iv) இல், H கம்பனியால் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்ட 20% பங்குகளையும் H கம்பனியின் உபகம்பனியான S கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்ட 36% பங்குகளையும் சேர்த்தே 50% கட்டுப்பாடு பெறப்பட்டுள்ளதை அவதானிக்க.

3.2 திரட்டிய கணக்குகள் தயாரித்தல்

மேற்கண்டவாறான தொகுதி நிறுவனங்களைப் பொறுத்தவரை திரட்டிய ஐந்தொகைகளைத் தயாரிக்கும் போது இரண்டு விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும். அவையாவன,

அ) திரட்டிய ஐந்தொகையில் சிறுபாண்மையினர் பங்கு ஒரே தொகையாகவே காட்டுதல் வேண்டும்.

ஆ) நன்மதிப்பு (Goodwill), மூலதன ஒதுக்கம் (Capital reserve) என்பன காணப்படின் அவற்றின் மொத்தத் தொகைகளை வேறுவேறாக திரட்டிய ஐந்தொகையில் காட்டுதல் வேண்டும்.

திரட்டிய கணக்குகள் தயாரிக்கும் போது உப உபநிறுவனங்கள் காணப்படின் அவற்றுக்குரிய சிறுபாண்மையினர் பங்கினைக் கணிப்பிடுகையில் முக்கியமாக தொகுதி நிறுவனத்தின் ஒதுக்கங்களில் என்ன வீதத்தினை சிறுபான்மையினர் பெறுவீர்கள் என்பதனை அறிவதில் முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும். உதாரணமாக, பின்வரும் அமைப்பை எடுத்துக்கொள்வோம்.

H —80%— S —60%— SS

இதிலிருந்து பின்வரும் விடயங்களை அவதானிக்க முடியும்.

அ) H கம்பனி SS கம்பனியில் (80% x 60%) 48% ஐ சொந்தமாகக் கொண்டுள்ளது.

ஆ) S கம்பனியின் சிறுபாண்மையினர் SS கம்பனியில் (20% x 60%) 12% பங்கினைக் கொண்டுள்ளனர்.

இ) SS கம்பனியின் சிறுபாண்மையினர் SS கம்பனியில் மிகுதி உரிமைப் பங்குகளை (40% பங்கினை) சொந்தமாகக் கொண்டுள்ளனர்.

இங்கு H கம்பனி SS கம்பனியின் 48% பங்கிற்கே உரிமையாகவுள்ளது. எனினும் SS கம்பனி H கம்பனியின் உப உப கம்பனியாகும். ஏனெனில், H கம்பனியின் உபகம்பனியான S கம்பனிக்கு உபகம்பனியாக SS கம்பனி உள்ளது. எனவே,H கம்பனி S கம்பனியின் ஊடாக SS கம்பனியைக் கட்டுப்படுத்த முடியும்.

SS கம்பனியால் ரூபா 1,000 பங்கிலாபமாக வழங்கப்படுமாயின் அது எவ்வாறு பகிரப்படும் என்பதனைப் பார்ப்போம்.

ரூபா 1,000 பங்கிலாபத்தில் ரூபா 600 (60%) S கம்பனியால் பெறப்படும். மிகுதி ரூபா 400 (40%) SS கம்பனியின் சிறுபாண்மையினரால் பெறப்படும். S கம்பனியால் பெறப்படும் ரூபா 600 இல் ரூபா 480 (80%) H கம்பனியால் பெறப்படும். மிகுதி ரூபா 120 (20%) S கம்பனியின் சிறுபாண்மையினரால் பெறப்படும்.

எனவே,

H கம்பனியால் பெறப்படுவது	ரூபா 480 (48%)
S கம்பனி SS கம்பனியின் சிறுபாண்மையினரால் பெறப்படுவது (400 + 120)	ரூபா 520 (52%)
மொத்தம்	ரூபா 1,000 (100%)

3.3 உப உப கம்பனியில் கட்டுப்பாட்டைப் பெறும் திகதி

உப உப கம்பனியில் பிடிப்புக் கம்பனி கட்டுப்பாட்டைப் பெறும் திகதி பின்வருமாறு தீர்மானிக்கப்படும்.

அ) உபகம்பனி (S) ஏற்கனவே உப உப கம்பனியில் (SS) பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தால் பிடிப்புக் கம்பனி (H) உப கம்பனியில் (S) பங்குகளைக் கொள்வனவு செய்த திகதி.

ஆ) அவ்வாறில்லாது உபகம்பனி (S) பங்குகளை பிடிப்புக் கம்பனி (H) கொள்வனவு செய்த பின்பு, உபகம்பனி (S) உபஉப கம்பனியில் (SS) பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தால் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட திகதி.

உதாரணம் :- 1

	I	II
H கம்பனி S கம்பனியில் கொள்வனவு	30.06.1998	10.11.1998
S கம்பனி SS கம்பனியில் கொள்வனவு	15.04.1998	15.01.1999
உபஉப கம்பனியில் கட்டுப்பாடு பெறப்படும் திகதி	30.06.1998	15.01.1999

சுருக்கமாகக் குறிப்பிடின் எந்தக் கொள்வனவு பிந்தி நடக்கின்றதோ அந்தத் திகதியிலேயே உபஉப கம்பனியில் கட்டுப்பாடு பெறப்படும்.

3.4 உபஉப நிறுவனங்களுடன் திரட்டிய கணக்குகளைத் தயாரித்தல்

உபஉப நிறுவனங்களுடன் திரட்டிய கணக்குகளைத் தயாரிப்பதற்கு இரண்டுவித முறைகள் பின்பற்றப்படுகின்றன.

அ) நேர்முறை / ஒருபடி முறை (Direct or Single Stage Method)

ஆ) நேரில் முறை / இருபடி முறை (Indirect or Two Stage Method)

நேர்முறையில் எல்லாக் கணிப்பீடுகளும் அதாவது நன்மதிப்பு, சிறுபாண்மையினர் பங்கு, திரட்டிய ஒதுக்கங்கள் எல்லாவற்றுக்குமான கணிப்பீடுகள் ஒரே தடவையிலேயே செய்யப்பட்டு திரட்டிய கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

நேரில் முறையில் மேற்கூறப்பட்ட கணிப்பீடுகள் தனித்தனியாக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் செய்யப்படுகின்றன. இம்முறை ஒன்றுக்கு மேற்பட்ட திரட்டிய கணக்குகள் தயாரிக்கப்படுவதைப் போன்று செய்யப்படும். உதாரணமாக, பிடிப்புக் கம்பனி, உபகம்பனி, உபஉப கம்பனி எனக் காணப்படுமாயின் இதில் உபகம்பனி, உப உப கம்பனிகளுக்கிடையிலான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டு பின் பிடிப்புக் கம்பனி உபகம்பனிகளுக்கிடையிலான செம்மையாக்கல்கள் செய்யப்படும். பின் திரட்டிய கணக்குகள் தயாரிக்கப்படும். உபஉப உபகம்பனி (Sub-Sub-Subsidiary company) காணப்படுமாயின் நேரில் முறையில் மூன்றுபடி முறை பின்பற்றப்பட்டு திரட்டிய கணக்குகள் தயாரிக்கப்படும்.

நேரில் முறை அல்லது இருபடி முறையே நடைமுறையில் நிறுவனங்களால் பின்பற்றப்படுகின்றது. நேர் முறை அல்லது ஒருபடி முறை பரீட்சைகளின் போது பயனுள்ளதாக அமைகின்றது. இம்முறை நேரத்தை மீதப்படுத்துவதுடன் பரீட்சகர்களாலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

3.4.1 நேர்முறை / ஒருபடி முறை (Direct or Single Stage Method)

உதாரணம் :- 2

கீழே தரப்படுவது H கம்பனி, S கம்பனி, SS கம்பனி ஆகியவற்றின் 30 யூன் 1998 இல் உள்ளபடியான ஐந்தொகைகளாகும்.

	H கம்பனி		S – கம்பனி		SS – கம்பனி	
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள்:						
உருவச் சொத்துக்கள்		105,000		125,000		180,000
முதலீடுகள் - கிரயத்தில்						
S கம்பனியில் 80,000 பங்குகள்		120,000				
SS கம்பனியில் 60,000 பங்குகள்				110,000		
நடைமுறைச் சொத்துக்கள்	80,000		70,000		60,000	
செல்மதியாளர்.	(30,000)	50,000	(35,000)	35,000	(25,000)	35,000
		275,000		270,000		215,000
மூலதனமும் ஒதுக்கங்களும் :						
ரூபா 1.00 சாதாரண பங்குகள்		80,000		100,000		100,000
ஒதுக்கங்கள்		195,000		170,000		115,000
		275,000		270,000		215,000

H கம்பனி S கம்பனியில் பங்குகளைக் கொள்வனவு செய்த போது S கம்பனியின் ஒதுக்கங்களில் ரூபா 70,000 மீதியாக காணப்பட்டது. S கம்பனி SS கம்பனியில் பங்குகளைக் கொள்வனவு செய்த போது SS கம்பனியின் ஒதுக்கங்களில் ரூபா 50,000 மீதியாகக் காணப்பட்டது.

திரட்டிய போதுள்ள நன்மதிப்பு பதிவழிக்கப்படுவதில்லை எனக் கொண்டு திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்க.

விடை :

இவ் உதாரணத்தில் H கம்பனி S கம்பனியில் 80% கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. S கம்பனி SS கம்பனியில் 60% கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. எனவே, H கம்பனி SS கம்பனியில் 48% உரிமையைக் கொண்டுள்ளது (80% x 60%)

S கம்பனியின் சிறுபாண்மையினர் SS கம்பனியில் 12% உரிமையைக் கொண்டுள்ளனர் (40% x 20%). SS கம்பனியின் சிறுபாண்மையினர் SS கம்பனியில் 40% உரிமையைக் கொண்டுள்ளனர்.

S கம்பனியின் சிறுபாண்மையினர் S கம்பனியில் 20% உரிமையைக் கொண்டுள்ளனர்.

எனவே, சிறுபாண்மையினர் பங்கினைக் கணிப்பிடும் போது S கம்பனியின் பங்குமுதல் ஒதுக்கங்களில் 20% மும் SS கம்பனியின் பங்குமுதல் ஒதுக்கங்களில் 52% மும் சேர்த்துக் கணிப்பிடப்படும்.

நன்மதிப்பு கணிப்பிடப்படும் போது S கம்பனியின் 80% முதலீட்டுக்கான சொத்துக்களும் SS கம்பனியில் 48% முதலீட்டுக்கான சொத்துக்களும் கிரயத்துடன் ஒப்பிடப்படும். S கம்பனி SS கம்பனியில் செய்த முதலீட்டின் கிரயம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு நன்மதிப்புக் கணிப்பீட்டுக்கு 80% மும் சிறுபாண்மையினர் பங்கிற்கு 20% மும் கொண்டு செல்லப்படும்.

ஒதுக்கங்கள் வழமையான முறையில் செம்மையாக்கப்படும்.

சிறுபாண்மையினர் பங்கு :

	ரூபா	ரூபா
S கம்பனி		
பங்குமுதல் (20% x ரூபா 100,000)		20,000
ஒதுக்கங்கள் (20% x ரூபா 170,000)		34,000
ளுளு கம்பனியில் முதலீடுகள் (20% x ரூபா 110,000)		(22,000)
		32,000
SS கம்பனி		
பங்குமூலதனம் (52% x ரூபா 100,000)	52,000	
ஒதுக்கங்கள் (52% x ரூபா 115,000)	59,800	111,800
		143,800

நன்மதிப்பு :

	ரூபா	ரூபா
S கம்பனி		
முதலீட்டின் கிரயம்		120,000
தேறிய சொத்துக்களின் பங்கு :		
சாதாரண பங்குமுதல் (80% x ரூபா 100,000)	80,000	
ஒதுக்கங்கள் (80% x ரூபா 70,000)	56,000	136,000
மூலதன ஒதுக்கம்		(16,000)
SS கம்பனி		
முதலீட்டின் கிரயம் (80% x ரூபா 110,000)		88,000
சாதாரண பங்குமுதல் (48% x ரூபா 100,000)	48,000	
ஒதுக்கங்கள் (48% x ரூபா 50,000)	24,000	72,0000
நன்மதிப்பு		16,000

திரட்டிய ஒதுக்கங்கள் :

	ரூபா
H கம்பனி	
S கம்பனியின் கொள்வனவுக்கு பிந்திய இலாபப் பங்கு 80% (ரூபா 170,000 - ரூபா 70,000)	120,000
SS கம்பனியின் கொள்வனவுக்கு பிந்திய இலாபப் பங்கு 48% (ரூபா 115,000 - ரூபா 50,000)	80,000
	31,200
	306,200

H கம்பனி 30 யூன் 1998 இல; உள்ளபடியான திரட்டிய ஐந்தொகை

	ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள் :		
அருவச் சொத்துக்கள்		16,000
உருவச் சொத்துக்கள்		410,000
நடைமுறைச் சொத்துக்கள்	210,000	
செல்மதியாளர்	90,000	120,000
		546,000
மூலதனமும் ஒதுக்கங்களும் :		
ரூபா 1.00 சாதாரண பங்குகள்		80,000
திரட்டிய ஒதுக்கங்கள்		306,200
மூலதன ஒதுக்கம் - திரட்டிய போது		16,000
சிறுபான்மையினர் பங்கு		143,800
		546,000

S கம்பனியின் சிறுபாண்மையினர் 20% ஆகும். S கம்பனி SS கம்பனியில் செய்த முதலீடு ரூபா 110,000 இல் 20% சிறுபாண்மையினர் பங்கில் கழிக்கப்பட்டுள்ளது.

S கம்பனியின் சிறுபாண்மையினருக்கு SS கம்பனியில் உள்ள உரிமை 12%. இந்தப் 12% SS கம்பனியின் சிறுபாண்மையின் 40% த்துடன் சேர்க்கப்பட்டு 52% பங்கு பெறப்பட்டுள்ளது.

உதாரணம் : 3

31 டிசம்பர் 1998இல் H கம்பனி SS கம்பனி ஆகியவற்றின் ஐந்தொகைகள் பின்வருமாறு.

	H கம்பனி		S – கம்பனி		SS – கம்பனி	
	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'
நிலையான சொத்துக்கள்:						
உருவச் சொத்துக்கள்		90		60		60
உப கம்பனியில் முதலீடுகள் கிரயத்தில்						
S கம்பனியில் பங்குகள்	90					
SS கம்பனியில் பங்குகள்	25	115	42	42		
		205		102		60
நடைமுறைச் சொத்துக்கள்	40		50		40	
செல்மதியாளர் - 1 வருடத்துக்குட்பட்டோர்						
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம்	30		20		10	
ஏனைய செல்மதியாளர்கள்	20		20		15	
	50		40		25	
தேறிய நடைமுறைச் சொத்துக்கள் (பொறுப்புக்கள்)		(10)		10		15

மேலதிக தகவல்கள் :

அ) 1 ஜனவரி 1995 இல் H கம்பனி S கம்பனியில் 60% பங்குகளைக் கொள்வனவு செய்தது. அவ்வேளை S கம்பனியின் இலாபநட்டக் கணக்கில் செலவு மீதி ரூபா 8,000 ஆக இருந்தது. பங்குவட்டக் கணக்கில் மீதி இருக்கவில்லை.

ஆ) 1 ஜனவரி 1996 இல் H கம்பனி SS கம்பனியில் 20% பங்குகளைக் கொள்வனவு செய்தது. S கம்பனி SS கம்பனியில் 60% பங்குகளையும் கொள்வனவு செய்தது. அத் திகதியில் SS கம்பனியின் இலாபநட்டக் கணக்கில் ரூபா 15,000 மீதியாக இருந்தது.

இ) S கம்பனியும் SS கம்பனியும் உபகம்பனிகளாக வந்த பின் பங்கிலாபம் எதனையும் கொடுப்பனவு செய்யவில்லை.

ஈ) பிரேரிக்கப்பட்ட பங்கிலாபங்கள் தொடர்பாக, பங்குகளைக் கொள்வனவு செய்த கம்பனிகள் தமது புத்தகங்களில் எதுவித பதிவுகளையும் செய்யவில்லை.

உ) திரட்டிய போதுள்ள நன்மதிப்பை ஒதுக்கங்களுக்கெதிராக உடனடியாகப் பதிவழிப்பது தொகுதி நிறுவனத்தின் கொள்-கையாகும்.

ஊ) 31 டிசம்பர் 1998 இல் முடிவடைந்த வருடத்தில் SS கம்பனி ரூபா 10,000 பெறுமதியான பொருட்களை H கம்பனிக்கு விற்றிருந்தது. இவற்றில் ரூபா 4,000 பெறுமதியான பொருட்கள் விற்பனை செய்யப்படாமல் H கம்பனியின் 31 டிசம்பர் 1998 இன் இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றிலடங்கியுள்ள இலாபம் ரூபா 1,000 ஆகும்.

H கம்பனியின் 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகையைத் தயார் செய்க.

விடை :-



S கம்பனியின் சிறுபாண்மையினர்		40%
SS கம்பனியில் சிறுபாண்மையினர்	20%	
SS கம்பனியில் (நேரில்) சிறுபாண்மையினர் (40% x 60%)	24%	44%

S கம்பனியில் பிடிப்பு நிறுவனப் பங்கு	60%
SS கம்பனியில் பிடிப்பு நிறுவனப் பங்கு (60% x 60%) + 20%	56%

SS கம்பனியில் பிடிப்பு நிறுவனத்திற்குரிய பங்கை பின்வருமாறும் கணிப்பிடலாம்.

100% SS கம்பனியின் மொத்த சிறுபாண்மையினர் 44% = 56%

தேறாத இலாபம் :

மொத்த தேறாத இலாபம் =	ரூபா	1,000
இதில் தொகுதி நிறுவனப் பங்கு (56%)	ரூபா	560
SS நிறுவனச் சிறுபாண்மையினர் பங்கு (20%)	ரூபா	200
S நிறுவனச் சிறுபாண்மையினர் பங்கு (24%)	ரூபா	240
		1,000

இதில் ரூபா 560 திரட்டிய ஒதுக்கத்தில் கழிக்கப்படும். ஏனையவை உரிய சிறுபாண்மையினர் பங்கில் கழிக்கப்படும்.

பெறவேண்டிய பங்கிலாபங்கள் :

S கம்பனிக்கு SS கம்பனியிலிருந்து ரூபா 6,000 கிடைக்கும். (ரூபா 10,000 x 60%)

S கம்பனியின் புத்தகங்களில் பதிவுகள் :

பெறவேண்டிய பங்கிலாபம் வரவு ரூபா 6,000
இலாபநட்டக் கணக்கு செலவு ரூபா 6,000

H கம்பனிக்கு S கம்பனியிலிருந்து ரூபா 12,000 உம் (ரூபா 20,000 x 60%) SS கம்பனியிலிருந்து ரூபா 2,000 உம் (ரூபா 10,000 x 20%) ஆக மொத்தம் ரூபா 14,000 பங்கிலாபமாகக் கிடைக்கவேண்டும்.

H கம்பனியின் புத்தகங்களில் பதிவுகள் :

பெறவேண்டிய பங்கிலாபம் வரவு ரூபா 14,000
இலாபநட்டக் கணக்கு செலவு ரூபா 14,000

இங்கு காட்டப்பட்ட பெறவேண்டிய பங்கிலாபங்கள் குறிப்பிடப்பட்ட கம்பனிகளின் பிரேரிக்கப்பட்ட பங்கிலாபங்களுடன் இரத்தாகும். பிரேரிக்கப்பட்ட பங்கிலாபக் கணக்குகளின் மீதி ரூபா 10,000 (**S** கம்பனி - ரூபா 8,000 : **SS** கம்பனி - ரூபா

2,000) சிறுபாண்மையினருக்குரியது. இது திரட்டிய ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பாகக் காட்டப்படும்.

சிறுபாண்மையினர் பங்கு :

S கம்பனி :

		ரூபா
பங்கு மூலதனம் (40% x ரூபா 50,000)		20,000
பங்குவட்டம் (40% x ரூபா 20,000)		8,000
ஒதுக்கங்கள் (40% x ரூபா 32,000 + 6,000)		15,200
தேறாத இலாப ஏற்பாடு		(240)
SS கம்பனியில் முதலீடு (40% x ரூபா 42,000)		(16,800)
		26,160
SS கம்பனி :		
பங்கு மூலதனம் (44% x ரூபா 50,000)	22,000	
ஒதுக்கங்கள் (44% x ரூபா 25,000)	11,000	
தேறாத இலாபம்	(200)	32,800
		58,960

நன்மதிப்பு

S கம்பனி :

			ரூபா
முதலீட்டுக் கிரயம்			90,000
தேறிய சொத்துக்களிப் பங்கு :			
பங்கு முதல்	50,000		
ஒதுக்கங்கள்	8,000		
	58,000	x 60%	34,800
நன்மதிப்பு			55,200

SS கம்பனி :

	ரூபா	ரூபா
முதலீட்டுக் கிரயம் :		
நேர்	25,000	
நேரில் (60% x ரூபா 42,000)	25,200	50,200
தேறிய சொத்துக்களின் பங்கு :		
பங்கு மூலதனம்	50,000	
ஒதுக்கங்கள்	15,000	
	65,000	26,400
தொகுதி நிறுவனப் பங்கு 56%		13,800
மொத்த நன்மதிப்பு (55,200 + 13,800)		69,000

ஒதுக்கங்கள் :

		ரூபா	ரூபா
H கம்பனி			45,000
பெறவேண்டிய பங்கிலாபம்			14,000
			59,000
S கம்பனியின் கொள்வனவுக்குப் பின்னய இலாபம்			
மீதி	32,000		
கொள்வனவுக்கு முந்தியது	(8,000)		
பெறவேண்டிய பங்கிலாபம்	6,000		
	30,000	x 60%	18,000
SS கம்பனியின் கொள்வனவுக்குப் பின்னய இலாபம்			
மீதி	25,000		
கொள்வனவுக்கு முந்தியது	15,000		
	10,000	x 56%	5,600
தேறாத இலாபம்			(560)
நன்மதிப்பு			(69,000)
			13,040

பங்குவட்டக் கணக்கு

	ரூபா
H கம்பனி	50,000
கொள்வனவுக்குப் பிந்திய S கம்பனியின் பங்கு-வட்டம் ரூபா 20,000 x 60%	12,000
	62,000

H கம்பனி : 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகை.

	ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள் :		
உருவச் சொத்துக்கள்		210,000
நடைமுறைச் சொத்துக்கள் (ரூபா 130,000 - 1,000)	129,000	
செல்மதியாளர் :		
ஒரு வருடத்துக்குட்பட்டவர்கள்		
சிறுபாண்மையினர் பங்கிலாபம்	10,000	
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம்	30,000	
ஏனைய செல்மதியாளர்	55,000	
	95,000	
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்		34,000
		244,000
செல்மதியாளர் :		
ஒருவருடத்துக்கு மேற்பட்டோர்		
10% கடன்பத்திரங்கள்		10,000
		234,000
மூலதனமும் ஒதுக்கங்களும் :		
ரூபா 1.00 சாதாரண பங்குகள்		100,000
பங்குவட்டம்		62,000
இலாபநட்டக் கணக்கு (ஒதுக்கம்)		13,040
சிறுபான்மையினர் பங்கு		58,960
		234,000

3.4.2 நேரில் முறை / இருபடி முறை (Indirect or Two Stage Method)

இம்முறையில் திரட்டிய ஐந்தொகை தயாரிக்கப்படும் போது H கம்பனிக்கும் S கம்பனிக்கும் இடையிலும் S கம்பனிக்கும் SS கம்பனிக்கும் இடையிலும் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுவது வழக்கம்.

உதாரணம் :- 4

உதாரணம் (3) க்கு நேரில் முறையின் கீழ் திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்க.

இங்கு :

H கம்பனி S கம்பனியில் 60% பங்குகளை கொள்வனவு செய்துள்ளது.

H கம்பனி SS கம்பனியில் 20% பங்குகளை கொள்வனவு செய்துள்ளது

S கம்பனி SS -கம்பனியில் 60% பங்குகளை கொள்வனவு செய்துள்ளது.

S கம்பனியின் சிறுபான்மையினர் 40%

SS கம்பனியின் சிறுபான்மையினர் 20%

தேறாத இலாபம் :

	ரூபா
மொத்த தேறாத இலாபம்	1,000
இதில் பிடிப்புக் கம்பனியின் (H) நேரடிப்பங்கு 20%	200
பிடிப்புக் கம்பனியின் (H) நேரில் பங்கு S கம்பனியூடாக (60% x 60%) 36%	360
பிடிப்புக் கம்பனியின் மொத்தப் பங்கு	560
S கம்பனி சிறுபான்மையினர் பங்கு (60% x 40%) 24%	240
SS கம்பனி சிறுபான்மையினர் பங்கு 20%	200
	1,000

இந்த தேறாத இலாபங்கள் பொருத்தமான கணக்குகளில் கழிக்கப்படும். இதில் S கம்பனியின் தேறாத இலாபம் ரூபா 600 (60%). இதில் 60% பிடிப்புக் கம்பனிக்கும் 40% S கம்பனிச் சிறுபாண்மையினருக்கும் சாட்டுதல் செய்யப்படும். இதற்குப் பதிலாக S கம்பனிக்குரிய மொத்தத் தொகையான ரூபா 600 ஐயும் S கம்பனியின் இலாபநட்டக் கணக்கில் வரவு வைத்தாலும் ஒரே விளைவே ஏற்படும்.

சிறுபாண்மையினர் பங்கு :

சிறுபாண்மையினர் பங்கு – S (40%) சிறுபாண்மையினர் பங்கு – SS (20%) என இரண்டு கணக்குகள் தயாரிக்கப்படும். இரண்டு மீதிகளும் திரட்டிய ஐந்தொகையில் ஒன்று சேர்க்கப்படும்.

கட்டுப்பாட்டுச் செலவு :

இங்கு மூன்று கொள்வனவுகள் நடைபெற்றுள்ளமையால் மூன்று கட்டுப்பாட்டு செலவுக் கணக்குகள் தயாரிக்கப்படும். அவையாவன,

கட்டுப்பாட்டுச் செலவு H in S
கட்டுப்பாட்டுச் செலவு H in SS
கட்டுப்பாட்டுச் செலவு S in SS

நன்மதிப்பு பதிவழிப்பு :

திரட்டிய போதுள்ள நன்மதிப்பு பொதுவாகப் பதிவழிக்கப்படும். பதிவழிப்பின் போது தொகுதி நிறுவனத்திற்குரிய தொகை திரட்டிய இலாபநட்டக் கணக்கில் (அல்லது திரட்டிய ஒதுக்கம்) பதிவழிக்கப்படும். சிறுபாண்மையினருக்குரிய பங்கு சிறுபாண்மையினர் பங்கில் பதிவழிக்கப்படும்.

உபகம்பனி (S) ஒன்று உப உப கம்பனி (SS) ஒன்றில் முதலீடு செய்ததால் எழுகின்ற நன்மதிப்பின் போதே சிறுபாண்மையினரது பங்கு என்ற பிரச்சனை எழும். பிடிப்புக் கம்பனி (H) ஒன்று உபகம்பனியில் (S) 100% கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் போது இவ் வகையான நன்மதிப்பு முழுவதும் பிடிப்புக் கம்பனிக்குரியதாகும். ஆனால் பகுதிக் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் போது பிடிப்பு நிறுவனப் பங்கு திரட்டிய இலாபத்திலும், சிறுபாண்மையினர் பங்கு, சிறுபாண்மையினர் பங்கிலும் பதிவழிக்கப்படும். இந்த நன்மதிப்பை முழுமையாக உபகம்பனி (S) யின் இலாபநட்டக் கணக்கிலும் பதிவழிக்கலாம்.

செய்கைகள் :

கட்டுபபாட்டுச் செலவு **H in S**

	ரூபா	ரூபா
முதலீட்டுக் கிரயம்		90,000
பங்குமுதல் - S ரூபா 50,000 x 60%	30,000	
கொள்வனவுக்கு முந்திய இலாபம் - S ரூபா 8,000 x 60%	4,800	34,800
நன்மதிப்பு		55,200

கட்டுப்பாட்டுச் செலவு **H in SS**

	ரூபா	ரூபா
முதலீட்டுக் கிரயம்		25,000
பங்குமுதல் - S ரூபா 50,000 x 20%	10,000	
கொள்வனவுக்கு முந்திய இலாபம் - S ரூபா 15,000 x 20%	3,000	13,000
நன்மதிப்பு		12,000

கட்டுப்பாட்டுச் செலவு **S in SS**

	ரூபா	ரூபா
முதலீட்டுக் கிரயம்		42,000
பங்குமுதல் - S ரூபா 50,000 x 60%	30,000	
கொள்வனவுக்கு முந்திய இலாபம் - S ரூபா 15,000 x 60%	9,000	39,000
நன்மதிப்பு		3,000

சிறுபாண்மையினர் பங்கு S (40%)	ரூபா	சிறுபாண்மையினர் பங்கு SS (20%)	ரூபா
பங்குமுதல்	20,000	பங்குமுதல்	10,000
பங்குவட்டம்	8,000	இலாபநட்டக் கணக்கு	5,000
இலாபநட்டக் கணக்கு	17,600	தேறாத இலாபம்	(200)
நன்மதிப்பு பதிவழிப்பு (3,000 x 40%)	(1,200)		14,800
தேறாத இலாப ஏற்பாடு	(240)		
	44,160		

திரட்டிய இலாபநட்டக் கணக்கு

	ரூபா	ரூபா
H கம்பனி		45,000
பெறவேண்டிய பங்கிலாபம்		14,000
		59,000
S கம்பனி :		
மீதி	32,000	
பெறவேண்டிய பங்கிலாபம்	6,000	
கொள்வனவுக்கு முந்தியது	(8,000)	
SS கம்பனியிலிருந்து கொள்வனவுக்குப் பிந்திய இலாபம்	6,000	
	36,000 x 60%	21,600

SS கம்பனி :

மீதி	25,000		
கொள்வனவுக்கு முந்தியது	15,000		
	10,000 x 20%		2,000
தேறாத இலாபம்			(560)
நன்மதிப்பு பதிவழிப்பு			
H in S		55,200	
H in SS		12,000	
S in SS (3,000 x 60%)		1,800	(69,000)
			13,040

இலாபநட்டக் கணக்கு – S

	ரூபா	ரூபா
மீதி		32,000
SS கம்பனியிலிருந்து கொள்வனவுக்குப் பிந்திய இலாபம் (25,000 – 15,000) 60%		6,000
பெறவேண்டிய பங்கிலாபம்		6,000
		44,000
கட்டுப்பாட்டுச் செலவு H in S (ரூபா 8,000 x 60%)	4,800	
திரட்டிய இலாபநட்டக் கணக்கு (ரூபா 44,000 – 8,00) 60%	21,600	
சிறுபாண்மையினர் - S (ரூபா 44,000 x 40%)	17,600	44,000

ஐந்தொகை நேர் முறையிலமைந்தது போலவே அமையும்.

குறிப்பிட்ட திகதியிலுள்ள உப கம்பனியின் (S) இலாபநட்டக் கணக்கு மீதியானது உப கம்பனியின் இலாபநட்டக் கணக்கு மீதியுடன், உப உப கம்பனியிலிருந்து கிடைக்க-வேண்டிய கொள்வனவுக்குப் பிந்திய இலாபப் பங்கையும் சேர்த்ததாக அமையும்.

S கம்பனி SS கம்பனியில் பங்குகளைக் கொள்வனவு செய்த பின்பு, H கம்பனி S கம்பனியில் பங்குகளைக் கொள்வனவு செய்தால், S கம்பனியின் கொள்வனவுக்கு முந்திய இலாபம் மேற்கூறப்பட்டவாறே கணிக்கப்படும்.

உதாரணம் :- 5

1996 இல் S கம்பனி SS கம்பனியில் 80% பங்குகளைக் கொள்வனவு செய்தது. அவ்வேளை SS கம்பனியின் இலாபநட்டக் கணக்கு மீதி ரூபா 40,000 ஆகும். 1997 இல் H கம்பனி S கம்பனியில் 75% பங்குகளைக் கொள்வனவு செய்தது. அவ்வேளை S கம்பனியின் இலாபநட்டக் கணக்கில் ரூபா 50,000 மீதியாகவும் SS கம்பனி இலாபநட்டக் கணக்கில் ரூபா 70,000 மீதியாகவும் காணப்பட்டது.

1997 இல் S கம்பனியின் கொள்வனவுக்குப் பிந்திய இலாபத்தைக் கணிக்க.

SS கம்பனியிலிருந்து S கம்பனிக்கு கிடைக்கவேண்டிய கொள்வனவுக்குப் பிந்திய இலாபம்

ரூபா (70,000 – 40,000) x 80% = ரூபா 24,000

1997 இல் S கம்பனியின் இலாபநட்டக் கணக்கு மீதி

ரூபா (50,000 + 24,000) = ரூபா 74,000

இதில் H கம்பனியின் பங்கு ரூபா 74,000 x 75% = ரூபா 55,500

அத்தியாயம் 4

திரட்டிய இலாபநட்டக் கணக்கு (Consolidated Profit and Loss Account)

4.1 அறிமுகம்

பிடிப்புக் கம்பனியினதும் உபகம்பனி, உப உப கம்பனி-களினதும் தனித்தனி கணக்குகளை ஒன்றிணைப்பதன் மூலமே திரட்டிய இலாபநட்டக் கணக்குத்த யாரிக்கப்படுகின்றது. தொகுதி நிறுவனத்தினுள் அடங்கியுள்ள தனித்தனி நிறுவனங்களின் கணக்குகளை ஒரு தனி நிறுவனத்தின் கணக்காக காட்டும் நடவடிக்கையே இதுவாகும். நடைமுறையில் செய்முறை அட்டவணை (Consolidated schedule) ஒன்றைத் தயாரிப்பதன் மூலமே திரட்டிய இலாபநட்டக் கணக்குத் தயாரிக்கப்படுகின்றது. இவ் அட்டவணையில் தனித்தனி இலாபநட்டக் கணக்குகள் பக்கம் பக்கமாகப் பதியப்பட்டு தேவையான செம்மையாக்-கல்களின் பின் மொத்தத் தொகை பெறப்படும். இதன் அடிப்படையிலேயே திரட்டிய இலாபநட்டக் கணக்குத் தயாரிக்-கப்படும். எனினும் பரீட்சை நோக்கங்களுக்கு நேரத்தை மீதப்படுத்தும் நோக்கமாக "சிறுபாண்மையினர் பங்கு" போன்ற சிக்கலான கணிப்பீடுகள் மட்டுமே செய்முறை மூலம் செய்யப்-படுகின்றன. ஏனையவை செய்முறைகளின்றி நேரடியாகவே திரட்டிய இலாபநட்டக் கணக்கிற்கு கொண்டு செல்லப்படுகின்றன.

திரட்டிய இலாபநட்டக் கணக்கிற்குத் தயாரிக்கப்படும் போது பின்வருவனவற்றிற்கு திரட்டிய ஐந்தொகை தயாரிக்-கப்படும் போது பின்பற்றப்படும் அதே கோட்பாடே பின்பற்றப்-படுகின்றது.

- கொள்வனவுக்கு முந்திய இலாபம் / நட்டம் -
- கம்பனிகளுக்கிடையிலான தேறாத இலாபம்

- கம்பனிகளுக்கிடையிலான பங்கிலாபங்கள்
- சிறுபாண்மையினர் பங்கு போன்றவை.

தொகுதி நிறுவனத்தின் முடிவுகளை ஒரே தனி அலகின் முடிவுகளாகக் காட்டும் வகையிலேயே திரட்டிய இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு செய்யப்பட வேண்டிய செய்கைகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

* **விற்பனை முதல் வரிக்குப்பின் இலாபம் வரை :**

விற்பனை முதல் வரிக்குப்பின் இலாபம் வரை உள்ள விடயங்களுக்கு பிடிப்பு நிறுவனத்தினதும் உப நிறுவனத்தினதும் உப உப நிறுவனத்தினதும் தொகைகளைக் கூட்டுதல் வேண்டும். உப கம்பனியிலிருந்து வரவேண்டிய பங்கிலாபம் தவிர்க்கப்படல் வேண்டும். அத்துடன் கம்பனிகளுக்கிடையிலான பின்வரும் நடவடிக்கைகளுக்குரிய செம்மையாக்கல்கள் செய்யப்படல் வேண்டும்.

கம்பனிகளுக்கிடையிலான விற்பனையும் அது தொடர்பான தேறாத இலாபமும் :

அ) விற்பனையிலும் விற்பனைக் கிரயத்திலும் கம்பனிகளுக்கிடையிலான விற்பனைத் தொகையைக் கழித்தல்.

ஆ) விற்பனை பிடிப்புக் கம்பனியால் செய்யப்பட்டிருந்தால் தேறாத இலாபத்தை விற்பனைக் கிரயத்துடன் கூட்டுதல்.

இ) விற்பனை உப கம்பனியால் செய்யப்பட்டிருந்தால் தேறாத இலாபம் முழுவதையும் விற்பனைக் கிரயத்துடன் கூட்டுதல், சிறுபாண்மையினருக்குரிய தேறாத இலாபப் பங்கை சிறுபாண்மையினர் பங்கிலிருந்து கழித்தல்.

4..2 பெறுமானத்தேய்வு :

உப கம்பனியின் நிலையான சொத்துக்கள் நியாயமான பெறுமதிக்கேற்ப கூட்டி மறுபடி விலைமதிக்கப்பட்டு கணக்குகளில் பதியப்படாத சந்தர்ப்பத்தில்,

* மேலதிக பெறுமானத்தேய்வு திரட்டிய இலாபநட்டக் கணக்கில் சாட்டுதல் செய்யப்படும்.
  சிறுபாண்மையினருக்குரிய பங்கு சிறுபாண்மையினர் பங்கில் செம்மையாக்கப்படல் வேண்டும்.

4.3 நிலையான சொத்துக்களின் மாற்றம் :

இம்மாற்றத்தினால் கிடைத்த இலாபம் செலவுகளுடன் கூடடப்படல் வேண்டும். நிலையான சொத்துக்களில் அடக்கப்பட்டிருந்த இலாபத்தின் மீதான மேலதிக பெறுமானத்தேய்வுத் தொகை செலவுகளிலிருந்து கழிக்கப்படல் வேண்டும்.

4.4 சிறுபாண்மையினர் பங்கு :

சிறுபாண்மையினர் பங்கு பின்வருமாறு கணிக்கப்படும்.

உப கம்பனியின் வரிக்குப்பின்னைய இலாபம்	X
கழி :	
• தேறாத இலாபம் (1)	(X)
• நிலையான சொத்து விற்பனை இலாபம் (1)	(X)
• மேலதிக பெறுமானத்தேய்வு (2)	(X)
கூட்டு : * மேலதிக பெறுமானத்தேய்வு (3)	X
உபகம்பனிக்குரிய மொத்தம்	XX
சிறுபாண்மையினர் பங்கின் (%) வீதாசாரம்	X

(1) பொருட்களும் நிலையான சொத்துக்களும் உபகம்பனி-யால் விற்பனை செய்யப்பட்டிருந்தால் மட்டுமே இது பொருத்தமாகும்.

(1) நிலையான சொத்தினை மறுபடி விலைமதித்ததனால் ஏற்படும் மேலதிக பெறுமானத்தேய்வு.

(2) நிலையான சொத்துக்கள் பிடிப்புக் கம்பனியால் விற்பனை செய்யப்பட்டிருந்தால் மட்டும் இது பொருத்தமானதாகும்.

வரிக்குப் பின்னைய இலாபத்தில் முன்னுரிமைப் பங்கிலாபம் கழிக்கப்படல் வேண்டும். பின்பு சிறுபாண்மையினருக்குரிய முன்னுரிமைப் பங்கிலாபம் கூட்டப்படல் வேண்டும்.

4.5 பங்கிலாபம் :

பங்கிலாபம் பிடிப்புக் கம்பனிக்கு மட்டும் பிரேரிக்கப்படும். உபகம்பனியின் பங்கிலாபம், பிடிப்பக் கம்பனிக்கும், சிறு-பாண்மையினருக்கும் உரியது. திரட்டிய இலாபநட்டக் கணக்கில் காட்டப்படும் உபகம்பனி இலாபத்தில் பிடிப்புக் கம்பனியின் பங்கிலாபம் உள்ளடக்கப்பட்டு விடும். அதேபோல் சிறு-பாண்மையினர் பங்கை கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வரிக்குப் பின்னைய இலாபத்தில் சிறுபாண்மையினருக்குரிய பங்கிலாபமும் உள்ளடக்கப்பட்டு விடும். இதனால் தனியாகப் பிரேரிக்கத் தேவையில்லை. ஆனால் முன்னுரிமைப் பங்கி-லாபத்தில் சிறுபாண்மையினரின் விகிதாசாரம் சிறுபாண்மை-யினருடன் சேர்க்கப்படல் வேண்டும். ஆனால் முன்னுரிமைப் பங்குலாபத்தில் சிறுபாண்மையினரது பங்கு சிறுபாண்மையினர் பங்குடன் சேர்க்கப்படல் வேண்டும்.

உதாரணம் :- 1

H கம்பனி S கம்பனி 1995 இல் உருவாக்கப்பட்ட வேளை அதன் 75% மான பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தது. இவ்விரு கம்பனிகளினதும் 31 டிசம்பர் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சுருக்கப்பட்ட இலாபநட்டக் கணக்கு பின்வருமாறு :

	H கம்பனி	S கம்பனி
	ரூபா	ரூபா
விற்பனை	75,000	38,000
விற்பனைக் கிரயம்	30,000	20,000
மொத்த இலாபம்	45,000	18,000
நிர்வாகச் செலவுகள்	14,000	8,000
வரிக்கு முன்னைய இலாபம்	31,000	10,000
வரி	10,000	2,000
இவ்வாண்டுக்கான பகிரப்படாத இலாபம்	21,000	8,000
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.வந்தது	87,000	(7,000)
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.சென்றது	108,000	25,000

திரட்டிய இலாபநட்டக் கணக்கைத் தயாரிக்க.

விடை :

H கம்பனி : 31 டிசம்பர் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய இலாபநட்டக் கணக்கு.

	ரூபா
விற்பனை (75,000 + 38,000)	113,000
விற்பனைக் கிரயம் (30,000 + 20,000)	50,000
மொத்த இலாபம்	63,000
நிர்வாகச் செலவுகள் (14,000 + 8,000)	22,000
வரிக்கு முன்னைய இலாபம்	41,000
வரி (10,000 + 2,000)	12,000
வரிக்குப் பின்னைய இலாபம்	29,000
சிறுபாண்மையினர் பங்கு (25% x ரூபா 8,000)	2,000
இவ்வாண்டுக்கான தொகுதி நிறுவன பகிரப்படாத இலாபம்	27,000
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.வந்தது 87,000 + (17,000 x 75%)	99,750
(தொகுதி நிறுவனத்துக்குரியது மட்டும்)	
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.சென்றது	126,750

குறிப்புக்கள் :

* தொகுதி நிறுவன பகிரப்படாத இலாபம் திரட்டிய ஐந்தொகைக்காக கணிக்கப்படும் போது கிடைக்கும் அதே தொகையாகவே எப்போதும் இருக்கும்.

திரட்டிய ஒதுக்கம் - திரட்டிய ஐந்தொகைக்கான கணிப்பீடு :

	ரூபா
H கம்பனி	108,000
S கம்பனியின் கொள்வனவுக்குப் பிந்திய இலாபத்தின் பங்கு (ரூபா 25,000 x 75%)	18,750
	126,750

* S கம்பனியின் கீழ் கொண்டுவந்த பகிரப்படாத இலாபம் ரூபா 17,000 இல் சிறுபாண்மையினர் பங்கு (25% x ரூபா 17,000) ரூபா 4,250 நீக்கப்பட்டு பிடிப்புக் கம்பனிக்குரிய தொகையே திரட்டிய இலாபநட்டக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

4.6 கம்பனிகளுக்கிடையிலான வியாபாரம்

உதாரணம் :- 2

உதாரணம் (1) இல் S கம்பனி ரூபா 5,000 பெறுமதியான பொருட்களை 1998 இல் H கம்பனிக்கு விற்றுள்ளது எனவும் S கம்பனிக்கு இப்பொருட்களின் கிரயம் ரூபா 3,000 எனவும் 31 டிசம்பர் 1998 இல் இவற்றில் 50% பொருட்கள் H கம்பனியின் இருப்பிலிருக்கின்றன எனவும் கொண்டு திரட்டிய இலாபநட்டக் கணக்கினைத் தயாரிக்க.

விடை :

H கம்பனி : 31 டிசம்பர் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய இலாபநட்டக் கணக்கு.

	ரூபா
விற்பனை	108,000
விற்பனைக் கிரயம்	46,000
மொத்த இலாபம்	62,000
நிர்வாகச் செலவுகள்	(22,000)
வரிக்கு முன் இலாபம்	40,000
வரி	(12,000)
	28,000
சிறுபாண்மையினர் பங்கு	1,750
இவ்வாண்டுக்கான தொகுதி நிறுவனத்தின் இலாபம்	26,250
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.வந்தது	99,750
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.சென்றது	126,000

குறிப்புக்கள் :

	ரூபா	ரூபா
* விற்பனை (ரூபா 75,000 + ரூபா 38,000)	113,000	
கழி : கம்பனிகளுக்கிடையிலான விற்பனை	5,000	108,000
* விற்பனைக் கிரயம் : (ரூபா 30,000+ரூபா 20,000)		50,000
கழி : கம்பனிகளுக்கிடையிலான விற்பனை		(5,000)
கூட்டு : தேறாத இலாபம்		1,000
		46,000
* மொத்த இலாபம் (ரூபா 45,000 + ரூபா 18,000)		63,000
கழி : தேறாத இலாபம்		(1,000)
		62,000

(விற்பனைக் கிரயம் அல்லது மொத்த இலாபம் இவற்றில் ஒன்றைக் கணிப்பிட்டு பின் அதனை விற்பனையுடன் ஒப்பிட்டு மற்றையதைக் கணிக்க முடியும். எனினும், இவ்விரண்டு கணிப்பீடுகளையும் செய்தால் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்)

* சிறுபாண்மையினர் பங்கு (ரூபா 8,000 x 25%)	2,000
கழி : தேறாத இலாபம் (ரூபா 1,000 x 25%)	250
	1,750

* தேறாத இலாபம் : (ரூபா 5,000 - ரூபா 3,000) 50% = ரூபா 1,000

4.7 கம்பனிகளுக்கிடையிலான பங்கிலாபம்

உதாரணம் :- 3

S கம்பனியின் மூலதனம் ஒவ்வொன்றும் ரூபா 1.00 ஆன 10,000 6% முன்னுரிமைப் பங்குகளாலும் 10,000 சாதாரண பங்குகளாலும் ஆனது. 1 ஜனவரி 1995 இல் H கம்பனி S

கம்பனியில் 3,000 முன்னுரிமைப் பங்குகளையும் 7,500 சாதாரண பங்குகளையும் கொள்வனவு செய்திருந்தது. 31 டிசம்பர் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இரண்டு கம்பனிகளினதும் இலாபநட்டக் கணக்குகள் வருமாறு :

	H கம்பனி ரூபா	S கம்பனி ரூபா
விற்பனை	200,000	98,000
விற்பனைக் கிரயம்	90,000	40,000
மொத்த இலாபம்	110,000	58,000
நிர்வாகச் செலவுகள்	35,000	19,000
வரிக்கு முன்னைய இலாபம்	75,000	39,000
வரி	23,000	18,000
வரிக்குப் பின்னைய இலாபம்	52,000	25,000
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம் :		
முன்னுரிமை		600
சாதாரணம்	14,000	2,000
இவ்வருடத்திற்கான பகிரப்படாத இலாபம்	38,000	18,400
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.வந்தது	79,000	23,000
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.சென்றது	117,000	41,400

விடை :

H கம்பனி : 31 டிசம்பர் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய இலாபநட்டக் கணக்கு.

	ரூபா
விற்பனை	298,000
விற்பனைக் கிரயம்	130,000
மொத்த இலாபம்	168,000
நிர்வாகச் செலவுகள்	54,000
வரிக்கு முன் இலாபம்	114,000
வரி	41,000
வரிக்குப் பின் இலாபம்	73,000
சிறுபாண்மையினர் பங்கு (1)	5,520
இவ்வாண்டுக்கான தொகுதி நிறுவனத்தின் இலாபம்	67,480
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம் (2)	14,000
இவ்வருடத்துக்கான பகிரப்படாத இலாபம்	53,480
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.வந்தது	96,250
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.சென்றது	149,730

குறிப்புக்கள் :

(1) சிறுபாண்மையினர் பங்கு :

உபகம்பனியின் வரிக்குப் பின்னர் இலாபத்திலிருந்தே சிறுபாண்மையினர் பங்கு கணிக்கப்படும். அவ்வேளை முன்னுரிமைப் பங்கிலாபம் (ரூபா 600) இலாத்திலிருந்து கழிக்கப்படல் வேண்டும். மேலும் சிறுபாண்மையினருக்குரிய பங்கிலாபம் சிறுபாண்மையினர் பங்கில் சேர்க்கப்பட வேண்டும். எனவே,

	ரூபா
சிறுபாண்மையினருக்குரிய இலாபம் (ரூபா 21,000 - 600 x 25%)	5,100
முன்னுரிமைப் பங்கிலாபம் (ரூபா 600 x 70%)	420
சிறுபாண்மையினர் பங்கு	5,520

(முன்னுரிமைப் பங்குகளில் பிடிப்புக் கம்பனி கொள்வனவு செய்தது போக மிகுதி 70% சிறுபாண்மையினருக்கு உரியதாகும்)

(2) பிடிப்பு நிறுவனத்துக்குரிய பங்கிலாபம் மட்டுமே காட்டப்படும்.

(3) பகிரப்படாத இலாபம் கீழ் கொண்டு வந்தது :

	ரூபா
H கம்பனியின் இலாபம்	79,000
S கம்பனியின் இலாபத்தில் பங்கு ரூபா 23,000 x 75%	17,250
	96,250

S கம்பனியின் சென்ற வருட பகிரப்படாத இலாபத்தில் சிறுபாண்மையினர் பங்கினைப் பற்றி இவ்வருடம் அக்கறைகொள்ளத் தேவையில்லை.

4.8 கொள்வனவுக்கு முந்திய இலாபம்

பங்குகளின் கொள்வனவானது நடைமுறை ஆண்டில் நடைபெறாவிடில் திரட்டிய இலாபநட்டக் கணக்குத் தயாரிக்கும் போது எதுவித செம்மையாக்கல்களும்

செய்யவேண்டிய அவசியம் எழாது. ஆனால் நடைமுறை ஆண்டில் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் திரட்டிய இலாபநட்டக் கணக்கில் கொள்வனவுக்கு முந்திய இலாபம் சேர்க்கப்படக்கூடாது. திரட்டிய இலாபநட்டக் கணக்கிலிருந்து கொள்வனவுக்கு முந்திய இலாபத்தை நீக்குவதற்கு இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

முறை 1 :

இம்முறையின் கீழ் வழமை போல் திரட்டிய இலாப-நட்டக் கணக்கு செய்யப்பட்டு வரிக்குப் பின்னைய இலா-பத்திலிருந்து கொள்வனவுக்கு முந்திய இலாபம் கழிக்கப்படும். (கொள்வனவுக்கு முந்திய உபகம்பனி இலாபம் மட்டுமே கழிக்கப்படும்)

முறை 2 :

இம்முறையின் கீழ் இலாபநட்டக் கணக்கில் இடம்பெறும் உபகம்பனியின் விடயங்கள் கொள்வனவுக்கு முந்தியது பிந்தியது என இரண்டாகப் பிரிக்கப்பட்டு கொள்வ-னவுக்குப் பிந்திய இலாபம் மட்டுமே திரட்டிய இலாபநட்டக் கணக்கில் உள்ளடக்கப்படும்.

உதாரணம் 4 :

1 ஏப்ரல் 1998 இல் H கம்பின S கம்பனியில் 60% பங்குகளைக் கொள்வனவு செய்தது. 31 டிசம்பர் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இரண்டு கம்பனிகளினதும் இலாபநட்டக் கணக்குகள் பின்வருமாறு :

	H கம்பனி ரூபா	S கம்பனி ரூபா
விற்பனை	170,000	80,000
விற்பனைக் கிரயம்	65,000	36,000
மொத்த இலாபம்	105,000	44,000
நிர்வாகச் செலவுகள்	43,000	12,000
வரிக்கு முன்னைய இலாபம்	62,000	32,000
வரி	23,000	8,000
வரிக்குப் பின்னைய இலாபம்	39,000	24,000
பங்கிலாபம்	12,000	6,000
இவ்வருடத்திற்கான பகிரப்படாத இலாபம்	27,000	18,000
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.வந்தது	81,000	40,000
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.சென்றது	108,000	58,000

விடை :

முறை 1 :

1 ஏப்ரல் 1998 இல் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டமையால் மூன்ற மாத இலாபம் கொள்வனவுக்கு முந்தியதாகும்.

H கம்பனி : 31 டிசம்பர் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய இலாபநட்டக் கணக்கு.

	ரூபா
விற்பனை	250,000
விற்பனைக் கிரயம்	101,000
மொத்த இலாபம்	149,000
நிர்வாகச் செலவுகள்	55,000
வரிக்கு முன் இலாபம்	94,000
வரி	31,000
வரிக்குப் பின் இலாபம்	63,000
கொள்வனவுக்கு முந்திய இலாபம் - ரூபா $24,000 \times \frac{3}{12}$	6,000
	57,000
சிறுபாண்மையினர் பங்கு - ரூபா $24,000 \times \frac{9}{12} \times \frac{40}{100}$	7,200
இவ்வாண்டுக்கான பிடிப்புக் கம்பனி இலாபம்	49,800
பங்கிலாபம் - பிடிப்புக் கம்பனி	12,000
இவ்வருடத்துக்கான பகிரப்படாத இலாபம்	37,800
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.வந்தது	81,000
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.சென்றது	118,800

பகிரப்படாத இலாபம் கீழ்க் கொண்டு வந்தது பிடிப்புக் கம்பனிக்குரிய மட்டும் உரியதாகும். உப கம்பனியின் சென்ற வருட இலாபம் கொள்வனவுக்கு முந்தியதாகும். அதனை திரட்டிய இலாபநட்டக் கணக்கிற்கு கீழ்க் கொண்டுவரக்கூடாது.

முறை 2 :

இம்முறையில் உபகம்பனியின் இலாபநட்டக் கணக்கில் இடம்பெற்ற விற்பனை, கொள்வனவுக் கிரயம், செலவுகள், வரி போன்றவற்றில் (9 மாதங்களுக்குரியது) கொள்வனவுக்குப் பிந்தியவை மட்டுமே திரட்டிய இலாபநட்டக் கணக்கில் இடம்பெறும்.

H கம்பனி : 31 டிசம்பர் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய இலாபநட்டக் கணக்கு.

	ரூபா
விற்பனை (170,000 + 60,000)	230,000
விற்பனைக் கிரயம் (65,000 + 27,000)	92,000
மொத்த இலாபம்	138,000
நிர்வாகச் செலவுகள் (43,000 + 9,000)	52,000
வரிக்கு முன்னைய இலாபம்	86,000
வரி (23,000 + 6,000)	29,000
வரிக்குப் பின்னைய இலாபம்	57,000
சிறுபாண்மையினர் பங்கு (40% x ரூபா 18,000)	7,200
இவ்வாண்டுக்கான பிடிப்புக் கம்பனி இலாபம்	49,800
பங்கிலாபம்	12,000
இவ்வாண்டுக்கான பகிரப்படாத இலாபம்	37,800
பகிரப்படாத இலாபம் - கீ.கொ.வந்தது	81,000
	118,000

பயிற்சிகள்

1. கீழே தரப்படுபவை அன்பன் லிமிட்டட்டினதும் அதன் உப கம்பனிகளான ஆதவன் லிமிட்டட், இமயவன் லிமிட்டட் என்பவற்றினதும் 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான சுருக்கப்பட்ட ஐந்தொகைகளாகும்.

	அன்பன் லிமிட்டட் ரூபா '000	ஆதவன் லிமிட்டட் ரூபா '000	இமயவன் லிமிட்டட் ரூபா'000
வழங்கி முற்றாகச் செலுத்தப்பட்ட பங்கு			
மூலதனம் ரூபா 10 ஆன சாதாரண பங்குகள்	1,000	300	200
ரூபா 10 ஆன 12% முன்னுரிமைப் பங்குகள்	250	150	100
இலாப நட்டக் கணக்கு	800	400	300
15% திபெஞ்சர்கள்	200	100	60
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபங்கள்	130	48	32
திபெஞ்சர் வட்டி - நிலுவை	30	15	9
செல்மதி உண்டியல்கள்	25	17	10
செல்மதியாளர்கள்	165	40	9
	2,600	1,070	710
நிலையான சொத்துக்கள் - புத்தகப்பெறுமதி	1,620	670	300
ஆதவன் லிமிட்டட்டில் முதலீடுகள் - கிரயத்தில்			
சாதாரண பங்குகள்	400	-	-
முன்னிரிமைப் பங்குகள்	80	-	-
திபெஞ்சர்கள்	30	-	-
இமயவன் லிமிட்டட்டில் முதலீடுகள் - கிரயத்தில்			
சாதாரண பங்குகள்	-	160	-
இருப்பு - கிரயத்தில்	200	100	200
வருமதியாளர்	150	50	180
வருமதி உண்டியல்	25	30	20
வங்கி	95	60	10
	2,600	1,070	710

மேலதிக தகவல்கள்:

அ) அன்பன் லிமிட்டட் ஆதவன் லிமிட்டட்டில் பின்வருமாறு முதலீடு செய்துள்ளது.

20,000 சாதாரண பங்குகள்	- 1ஜனவரி 1998 இல்
5,000 சாதாரண பங்குகள் - பங்கிலாபத்துடன்	- 1 யூலை 1998 இல்,
8,000 முன்னுரிமைப் பங்குகள் - பங்கிலாபத்துடன்	- யூலை 1998 இல்,
ரூபா 30,000 திபெஞ்சர்கள் வட்டியுடன்	- 1 யூலை 1998 இல்

ஆ) 1 ஏப்ரல் 1998 இல் ஆதவன் லிமிட்டட், இமயவன் லிமிட்டட்டில் 12,000 பங்குகளைக் கொள்வனவு செய்தது.

இ) ஆதவன் லிமிட்டட் இமயவன் லிமிட்டட் ஆகியவற்றினது இலாநட்டக் கணக்கு மீதிகள் பின்வருமாறு உருவாக்கியிருந்தான.

	ஆதவன் லிமிட்டட் ரூபா'000	இமயவன் லிமிட்டட் ரூபா'000
31 டிசம்பர் 1997 இல் மீதி	48	(8)
1992க்கான இலாபம்	400	340
	448	332
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபங்கள்	48	32
31 டிசம்பர் 1998 இல் மீதி	400	300

ஈ) ஆதவன் லிமிட்டட்டுக்கு சாதகமாக, அன்பன் லிமிட்டட்டால் ஒப்புக்கொள்ளப்பட்டு 31 டிசம்பர் 1998இல் நிலுவையாகவிருந்த மாற்றுண்டியல்களின் தொகை ரூபா 10,000 ஆகும். இவற்றில் ரூபா 4,000 பெறுமதியான மாற்றுண்யல்கள் இமயவன் லிமிட்டட்டால் வங்கியில் கழிவு செய்யப்பட்டுவிட்டன.

அத்துடன் அன்பன் லிமிட்டட்டுக்கு சார்பாக, ஆதவன் லிமிட்டட்டால் ஒப்புக்கொள்ளப்பட்டு 31 டிசம்பர் 1998 இல் நிலுவையாகவிருந்த மாற்றுண்டியல்களின் தொகை ரூபா 5,000 ஆகும்.

உ) அன்பன் லிமிட்டட்டின் நிலையான சொத்துக்களில் 1.1.1997 இல் ஆதவன் லிமிட்டட்டால் ரூபா 10,00,000 பட்டியலிடப்பட்ட சொத்துக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆதவன் லிமிட்டட்டின் இலாப எல்லை கொள்விலையில் 25% ஆகும். அன்பன் லிமிட்டட் நிலையான சொத்துக்களை எப்போதும் குறைத்தெழுதப்பட்ட பெறுமதியில் ஆண்டுக்கு 20% இல் பெறுமானத்தேய்வு செய்கின்றது.

ஊ) இமயவன் லிமிட்டட்டால், ஆதவன் லிமிட்டட்டுக்கு கொள்விலையுடன் 33 1/3 வீதம் சேர்த்துப் பட்டியலிடப்பட்ட ரூபா 12,000 பொருட்கள் ஆதவன் லிமிட்டட்டின் இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எ) மூன்று கம்பனிகளினதும் 1998ஆம் ஆண்டுக்கான இலாபங்கள், ஆண்டு முழுவதும் ஒரே சீராக எழுந்தன எனக் கொள்ளலாம்.

அன்பன் லிமிட்டட்டினதும் அதன் உபகம்பனிகளினதும் 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகையை தயார் செய்யும்படி நீர் வேண்டப்படுகின்றீர்.

2. கரன் லிமிட்டட்டினதும் அதன் உபகம்பனிகளான அருணண் லிமிட்டட், பவன் லிமிட்டட் ஆகியவற்றினதும் 31 டிசம்பர் 1998 இல் உள்ளபடியான சுருக்கப்பட்ட ஐந்தொகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

	கரன் லிமிட்டட் ரூபா '000	அருணன் லிமிட்டட் ரூபா '000	பவன் லிமிட்டட் ரூபா'000
முற்றாகச் செலுத்தப்பட்ட பங்குமூலதனம் (ஒவ்வொன்றும் ரூபா 10 ஆனவை)			
12% முன்னுரிமைப் பங்குகள்	250	150	-
சாதாரண பங்குகள்	550	200	200
இலாபநட்டக் கணக்கு	200	100	75
10% தொகுதிக்கடன்கள்	100	50	-
செல்மதியாளர்	100	50	50
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபங்கள்			
முன்னுரிமை	24	12	-
சாதாரணம்	50	24	16
அருணன் லிமிட்டட்டிலிருந்து பெற்ற பங்கிலாபமும் வட்டியும்	15	-	-
	1,289	586	341
நிலையான சொத்துக்கள்	500	200	150
அருணன் லிமிட்டட்டில் முதலீடுகள்:			
சாதாரண பங்குகள்	300	-	-
முன்னுரிமைப் பங்குகள்	25	-	-
தொகுதிக்கடன்கள்	20	-	-
பவன் லிமிட்டட்டில் முதலீடுகள்			
சாதாரண பங்குகள்	-	225	-
இருப்பு	175	75	70
வருமதியாளர்	190	70	80
வங்கி	79	16	41
	1,289	586	341

மேலதிக தகவல்கள்:

அ) கரன் லிமிட்டட், அருணன் லிமிட்டட்டில் பின்வரும் வகையில் முதலீடு செய்துள்ளது.

1 ஜனவரி 1998இல்,

10,000 சாதாரண பங்குகள்
2,500 முன்னுரிமைப் பங்குகள்
ரூபா 20,000 தொகுதிக்கடன்கள்

1 யூலை 1998இல்,

5,000 சாதாரண பங்குகள்

ஆ) 1 ஜனவரி 1998இல் அருணன் லிமிட்டட், பவன் லிமிட்டட்டில் 12,000 சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்தது.

இ) 1 ஜனவரி 1998 இல் உள்ளபடியான இலாபநட்டக் கணக்கு மீதிகள் பின்வருமாறு:

கரன் லிமிட்டட் - ரூபா 2,00,00 செலவு
அருணன் லிமிட்டட் - ரூபா 50,000 செலவு
பவன் லிமிட்டட் - ரூபா 10,000 செலவு

ஈ) இவ்வருடகாலத்தில் எல்லாக் கம்பனிகளினதும் இலாபங்களும் வருடம் முழுவதும் சமனாக எழுந்துள்ளன எனக் கருதிக் கொள்ளலாம்.

உ) கரன் லிமிட்டட்டின் ஐந்தொகையில், அருணன் லிமிட்டட்டில் இருந்து பெற்ற பங்கிலாபமும் வட்டியும் எனக் காட்டப்பட்டுள்ள ரூபா 15,000 ஆனது, அருணன் லிமிட்டட்டிலிருந்து 31 டிசம்பர் 1997 இல் முடிவடைந்த

ஆண்டுக்காக கரண் லிமிட்டட்டால், முறையே சாதாரண முன்னுரிமைப் பங்குகளுக்கும் தொகுதிக்கடன்களுக்கும் பெறப்பட்ட பங்கிலாபங்களையும், வட்டியையும் குறித்து நிற்கின்றது.

ஊ) கரன் லிமிட்டடின் வருமதியாளரில் பவன் லிமிட்டட்டி-லிருந்து வரவேண்டிய ரூபா 20,000மும் உள்ளடங்கி-யுள்ளது.

எ) இவ்வருட காலத்தில் அருணன் லிமிட்டட் ரூபா 60,000 பட்டியலிடப்பட்ட பொருட்களைக் கரன் லிமிட்டடிற்கு விற்பனை செய்திருந்தது. இவை விற்பனை விலையில் 20% இலாபத்தைக் கொடுக்கப்கூடியதாகப் பட்டியலிடப்பட்-டிருந்தன. இவற்றுள் ரூபா 18,000 பெறுமதியான பொருட்கள் இன்னமும் இருப்பிலிருந்து, 31 டிசம்பர் 1998இல் உள்ளபடியான கரன் லிமிட்டட்டின் இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கரன் லிமிட்டட்டினதும் அதன் உப கம்பனிகளினதும் 31 டிசம்பர் 1998இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்கும்படி நீர் வேண்டப்படுகின்றீர்.

(40 புள்ளிகள்)

3. கீழே தரப்படுபவை 'பிக் லிமிட்டட்டினதும்' அதன் உபகம்பனியான 'சிமோல் லிமிட்டட்' டினதும் சுருக்கப்பட்ட ஐந்தொகைகளாகும்.

31 டிசம்பர் 1990இல் உள்ளபடியான ஐந்தொகைகள்

	பிக் லிமிட்டட் ரூபா '000	சிமோல் லிமிட்டட் ரூபா '000
வழங்கப்பட்டு முற்றாக இறுக்கப்பட்ட பங்கு மூலதனம்		
ரூபா 10/-, சாதாரண பங்குகள்	10,000	5,000
பங்குவட்டக் கணக்கு	1,500	-
மூலதன ஒதுக்கம் (1.1.90)	1,000	500
பொது ஒதுக்கம் (1.1.90)	1,200	800
இலாப நட்டக்கணக்கு (1.1.1990)	3,000	2,100
வருடத்துக்கான இலாபம்	2,000	400
செல்மதியாளர்	1,150	-
நடைமுறைக்கணக்கு - சிமோல் லிமிட்டட்	150	-
	20,000	8,800
நன்மதிப்பு கிரயத்தில்	2,000	900
பொறி - குறைத்தெழுதப்பட்ட பெறுமதி	8,100	4,050
பொருத்துக்கள் - குறைத்தெழுதப்பட்ட பெறுமதி	1,900	570
இருப்பு	2,050	1,630
வருமதியாளர்	1,200	780
வியாபார முதலீடுகள் - கிரயத்தில்	-	300
வங்கி	250	320
நடைமுறைக்கணக்கு - பிக்லிமிட்டட்	-	250
சிமோல் லிமிட்டட்டில் முதலீடுகள் கிரயத்தில்	4,500	-
	20,000	8,800

மேலதிக தகவல்கள்:

அ) பிக் லிமிட்டட், சிமோல் லிமிட்டட்டின் பங்குகளை பங்குலாபத்துடன் சேர்த்து பின்வருமாறு கொள்வனவு செய்தது.

1 ஜனவரி 1989இல் 200,000 பங்குகள் இவ்வேளை சிமோல் லிமிட்டட்டின் இலாபநட்டக்கணக்கிலும் பொது ஒதுக்கத்திலும் செலவு மீதிகளாக முறையே ரூபா 16,00,000/- மும், ரூபா 6,00,000/= மும் காணப்பட்டன.

1 யூலை 1990இல் 2,00,000 பங்குகள்.

ஆ) ஐந்தொகைகளில் காட்டப்பட்டுள்ள பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட தொகைகள்; 1990 ஆம் ஆண்டுக்காக ஒவ்வொரு கம்பனி தொடர்பாகவும் பொறிக்கு 10 வீதத்திலும், பொருத்துக்களும் 5 வீதத்திலும் பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பின் பெறப்பட்டவையாகும்.

இ) சிமோல் லிமிட்டட்டின் பங்குகளின் பெறுமதியினைக் கணிக்கும் பொருட்டு 1 யூலை 1990இல் பொறியும், பொருத்துக்களும் முறையே ரூபா 48,00,000/- ஆகவும், ரூபா 5,00,000/- ஆகவும் மறு மதிப்பீடு செய்யப்பட்டன. அதேவேளை வியாபார முதலீடுகள் பெறுமதியற்றவை-யாகக் கொள்ளப்பட்டன. ஆனால் இவை புத்தகங்-களில் பதிவு செய்யப்படவில்லை.

ஈ) சிமோல் லிமிட்டட்டின் கையிருப்பில், பிக் லிமிட்டட்டால் கிரயம் +25% இல் பட்டியலிடப்பட்ட ரூபா 6,00,000 பெறுமதியான பொருட்களும் அடங்கியுள்ளன.

உ) இரண்டு கம்பனிகளினதும் 1990ஆம் ஆண்டுக்கான இலாபங்கள், வருடம் முழுவதும் சமமாக ஏற்பட்டன என கருதிக் கொள்ளப்படலாம்.

ஊ) பிக் லிமிட்டட்டால், சிமோல் லிமிட்டட்டுக்கு அனுப்பப்பட்ட ரூபா 1,00,000/-க்கான காசோலையொன்று பின்னய கம்பனியால் ஜனவரி 1991இலேயே பெறப்பட்டது.

எ) 1990ஆம் ஆண்டுக்கு இரண்டு கம்பனிகளும் 10% பங்கிலாபத்தை பிரேரிக்க இணங்கியுள்ளன.

பிக் லிமிட்டட்டினதும், அதன் உபகம்பனியான சிமோல் லிமிட்டட்டினதும் 31 டிசம்பர் 1990இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகையை தயார் செய்யும்படி நீர் வேண்டப்படுகின்றீர்.

4. கீழே தரப்படுபவை 'A' லிமிட்டட்டினதும் அதன் உபகம்பனிகளான 'B' லிமிட்டட் 'C' லிமிட்டட் ஆகியவற்றினதும் சுருக்கப்பட்ட ஐந்தொகைகளாகும்.

31 மார்ச் 1998 இல் ஐந்தொகைகள்

	A லிமிட்டட் ரூபா '000	B லிமிட்டட் ரூபா '000	C லிமிட்டட் ரூபா'000
<u>வழங்கப்பட்ட பங்குமுதல் :</u>			
ஒவ்வொன்றும் ரூபா 10/- ஆன சாதாரண பங்குகள்	2,000	1,200	1,000
ஒவ்வொன்றும் ரூபா 10/ ஆன 12% முன்னுரிமைப் பங்குகள்	250	100	-
இலாபநட்டக் கணக்கு	800	600	200
10% திபெஞ்சர்கள்	100	80	50
செல்மதியாளர்	200	100	60

நடைமுறைக் கணக்குகள் :			
'A' லிமிட்டட்	-	150	20
'B' லிமிட்டட்	-	-	80
	3,350	2,230	1,410

நிலையான சொத்துக்கள் (குறைத்தெழுதப்பட்ட பெறுமதி)	500	480	600
'B' லிமிட்டட்டில் சாதாரண பங்குகள் கிரயத்தில்	1,300	-	-
'B' லிமிட்டட்டில் முன்னுரிமைப் பங்குகள் கிரயத்தில்	75	-	-
'B' லிமிட்டட்டில் திபெஞ்சர்கள் கிரயத்தில்	50	-	-
'C' லிமிட்டட்டில் சாதாரண பங்குகள் கிரயத்தில்	500	1,300	-
இருப்பு	375	120	250
வருமதியாளர்	200	100	200
நடைமுறைக் கணக்குகள்:			
'B' லிமிட்டட்	180	-	-
'C' லிமிட்டட்	20	100	
	3,350	2,230	1,410

உமக்கு பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

அ) உப நிறுவனங்களில் பங்குகள் பின்வருமாறு கொள்வனவு செய்யப்பட்டன.

30 யூன் 1996இல்.

B லிமிட்டட்டால் C லிமிட்டட்டில் 75,000 சாதாரண பங்குகள்

31 டிசம்பர் 1996 இல்

A லிமிட்டட்டால், B லிமிட்டட்டில் 80,000 சாதாரண பங்குகள்.

A லிமிட்டட்டால், B லிமிட்டட்டில் 7,500 முன்னுரிமைப் பங்குகள்.

A லிமிட்டட்டில் B லிமிட்டட்டில் ரூபா 50,000 திபெஞ்சர்கள்.

A லிமிட்டட்டால், C லிமிட்டட்டில் 25,000 சாதாரண பங்குகள்.

ஆ) 31 மார்ச் 1997, 31 மார்ச் 1998 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான இலாப நட்டப் பகிர் கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட சுருக்கம் வருமாறு:

	A லிமிட்டட் ரூபா '000	B லிமிட்டட் ரூபா '000	C லிமிட்டட் ரூபா'000
1 ஏப்பிரல் 1996 இல் மீதி	300	150	80
31 மார்ச் 1997 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம்	400	304	184
31 மார்ச் 1997இல் முடிவடைந்த ஆண்டுக்குப் பெறப்பட்ட பங்கிலாபங்கள் :			
B லிமிட்டட்டிலிருந்து	89	-	-
C லிமிட்டட்டிலிருந்து	36	108	-
	825	562	264
31 மார்ச் 1997 இல் பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம்	330	132	144
31 மார்ச் 1997 இல் மீதி	495	430	120
31 மார்ச் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம்	305	170	80
	800	600	200

இ. 31 மார்ச் 1997, 1998 களில் முடிவடைந்த ஆண்டுக்காக B லிமிட்டட்டிலிருந்து பெறப்பட்ட திபெஞ்சர் வட்டியை A லிமிட்டட் தனது இலாப நட்டக் கணக்கில் செலவு வைத்துள்ளது.

ஈ. 31 மார்ச் 1998 வரையான ஆண்டுக்காலத்தில் C லிமிட்டட் B லிமிட்டட்டுக்கு ரூபா 80,000ஆக பட்டிய-லிடப்பட்ட பொருட்களை விற்பனை செய்திருந்தது. இவை கொள்விலையில் 20% இலாபத்தைத் தரக்-கூடியதாக விலையிடப்பட்டிருந்தன. இப் பொருட்களில் ரூபா 40,000 பெறுமதியானவை இன்னமும் கையிருப்பி-லிருந்து 31 மார்ச் 1998 இல் உள்ளபடியான B லிமிட்டட்டின் இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உ. B லிமிட்டட்டால் A லிமிட்டட்டுக்கும் C லிமிட்டட்டால் B லிமிட்டட்டுக்கும் அனுப்பப்பட்ட காசோலைகள் 31 மார்ச் 1998இல் வழியிலிருந்தன.

ஊ. கொள்வனவின் போதான நன்மதிப்பை உடனடியாகப் பதிவழிப்பது தொகுதி நிறுவனத்தின் கொள்கையாகும்.

எ. 31 மார்ச் 1997இல் முடிவடைந்த ஆண்டில் எல்லாக் கம்பனிகளின் இலாபங்களும் ஆண்டு முழுவதும் ஒரே சீராக எழுந்தன எனக் கொள்ளலாம்.

ஏ. 31 மார்ச் 1998 இல் முடிவடைந்த ஆண்டுக்கு 12% சாதாரண பங்குலாபத்தைப் பிரேரிக்க எல்லாக் கம்பனி-களும் இணங்கியுள்ளன.

A லிமிட்டட்டினதும் அதன் கம்பனிகளினதும் 31 மார்ச் 1998 இல் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்கும் படி நீர் வேண்டப்படுகின்றீர்.

Reference :

- Floyd. A. Beams., Advanced Accounting, (1996), Prentice Hall International publishing.
- Frank Food, Business Accounting 1 % 2, (1997), Pitman Publishing.
- Jennings A.R. Financial Accounting (1995) D.P. Publications, London.
- Paul Gee., Spicer & Pegler's., Book Keeping & Accounts, (1995) Butter worths, London.
- Shukla. M.C., Grewal T.S. and Gupta S.C., Advanced Accounts., (1996) Chand & Company Ltd.
- Welliam Pickles., Accountancy., (1992), The English language Book Society and Pitman publishing.
- Sri Lanka Accounting Standards.

கங்கை ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
184A நாவலர் றோட் (பெருமாள் கோவிலடி) யாழ்.